Registered as a NewsPaper

விலை ரூபா: 10.00

இலவச பிரதி

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி-07 | 22-12-2005 | வியாழக்கிழமை | ஓசை-307

உங்கள் நிறுவனங்களின்
உள்ளக தொலைபேசி
இணைப்புக்களுக்கு...

கிளிநொச்சியில்
அதிக நிறுவனங்களுக்கு
உள்ளகத் தொலைபேசி
இணைப்புக்களை ஏற்படுத்தியவர்கள்.

நொதேன் ரெக்னோலஜி
பிறைவேட் லிமிட்டட்

இல:52, 2ஆம்குறுக்குத்தெரு, வவுனியா.
தொலைபேசி : 024-2221649.
இல: 20, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி : 021-2225653(சி-13518)

## யாழ்.இல் நடந்த வெவ்வேறு சம்பவங்களில் இரு படையினர் பலி; ஒன்பது பேர்காயம்!

### காயமடைந்தவர்களில் இருவர் மேஜர் தர அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இல் நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் மீதுநடத்தப்பட்டவெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் இரு சிறிலங்காப் படையினர் பலியாகினர். ஒன்பதுபேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் இருவர் மேஜர்தர அதிகாரிகள் ஆவர். கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல்களில் இவர்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதல்கள் பற்றித் தெரிய வருவதாவது:

கச்சாய் - கிளாலி வீதியூடாக 'டபிள்கப்' வாகனமொன்றில் சென்ற படையினர் மீது துப்பாக்கிச்சூடு, கைக்குண்டு வீச்சும் நடத்தப்பட்டதில் கோப்ரல் தரபடையினர் ஒருவர் கொல்லப்பட்டார். இரு மேஜர்கள் உட்பட ஆறுபேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் காயமடைந்த படையினர் தம்புத்தோட்டம் இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் உலங்குவானூர்தி மூலம் பலாலி இராணுவ வைத்திய

(12ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமனாறில் மக்கள் மீது சிறிலங்காப் படையினர் வெறியாட்டம்!

தொண்டமனாறு பகுதியில் வீதியோரத்தில் இருந்த பற்றைக்குள் இருந்து நேற்றுக்காலை கிளைமோர் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறிய இராணுவத்தினர் அவ்வீதியால் சென்ற வாகனங்களை மறித்து கடும் சோதனை நடத்தியுள்ளனர்.

இக்கிளைமோர் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறிய படையினர் அவ்வீதியால் சென்றோரை முதலில் கடுமையாகத் தாக்கினர். பின்னர் அவ்வீதியால் சென்ற வாகனங்களைச் சோதனையிட்டு அவற்றின் இலக்கங்களைப் பதிவு செய்ததுடன், பொதுமக்களையும் மறித்து அவர்களின் அடையாள இலக்கங்களைப் பதிவு செய்தனர். இதேவேளை, வடமராட்சியில் கிராமக் கோட்டுச் சந்தி, நெல்லியடி, மந்திகை, துன்னாலை, புலோலி, மெத்தைக்கடைச் சந்தி ஆகிய இடங்களில் படையினர் குவிக்கப்பட்டு அவ்வீதிகளால் சென்ற வாகனங்கள் அனைத்தும் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன. (33)

# த.தே. கூட்டமைப்பின் கோரிக்கை சனாதிபதி மகிந்தவால் நிராகரிப்பு!

## யாழ். இல் இராணுவ நடவடிக்கைகள் தொடரும் எனவும் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

*தமிழ்தேசியக் கூட்டமைப்பினருக்கும் சிறிலங்கா சனாதிபதி மகிந்தராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பு சுமுகமான நிலையில் இடம்பெறவில்லை எனவும், அச்சந்திப்பு தமக்கு திருப்தியளிக்கவில்லை எனவும் யாழ். இல் இராணுவ நடவடிக்கைகள் தொடருமென சனாதிபதி மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளதாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.*

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைபற்றியும், படையினரின் செயற்பாடுகளை நிறுத்துமாறும் கோரி தமிழ் தேசியக் கூட்டமைப்பு சனாதிபதியைச் சந்தித்தது.

இந்தச் சந்திப்பு நிறைவடைந்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்புத் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் இளம்பெண் பாலியல் வல்லுற

(12ஆம் பக்கம் பார்க்க)



கூட்டமைப்பு - மகிந்த சந்திப்பு

## புங்குடுதீவில் சுற்றிவளைப்பு 12பேர் படையினரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். புங்குடுதீவில் நேற்றுக்காலை சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட சிறிலங்காப் படையினர் 12பேரை கைது செய்துள்ளனர்.புங்குடுதீவு பிரதேச செயலகத்தை அண்மித்த பகுதிகளில் படையினர் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

காலை 9.00மணிமுதல் 10.00 மணிவரை சுமார் ஒருமணி நேரம் வரை இந்தச் சுற்றிவளைப்பு தேடுதலில் ஈடுபட்டு வீடுகளிலும் வீதிகளிலும் நின்றோரை படையினர் கைதுசெய்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## போருக்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் அரசு மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்

### - அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

போருக்கான புறநிலையைத் தோற்றுவிப்பதற்காக சிங்கள அரசும் படைத்துறைத்தலைமைகளும் திட்டமிட்டு வருகின்றன.

இதனால் சிறிலங்கா அரசாங்கம் மீது அனைத்துலக சமூகம் காத்திரமான அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சர்வதேச சமூகத்திடம் கேட்டுள்ளார்.

நோர்வே அரசாங்கத்தின் உயர்மட்ட தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன்பாலசிங்கம் அவர்களைச் சந்தித்து, யாழ்.குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறிதது கலந்துரையாடியுள்ளனர்.

அன்ரன்பாலசிங்கம் அவர்களின் வதிவிடத்தில் நிகழ்ந்த இந்தக் கலந்துரையாடலில் நோர்வேயின் அபிவிருத்தித்துறை அமைச்சர் எரிக் சூல்ஹெய்ம், நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சின் உயர் அதிகாரி டெரிவிக், நோர்வேத்தூதுவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் வெறியாட்டத்தைக் கண்டித்து கிளிநொச்சியில் மக்கள் பேரணி

(கிளிநொச்சி)

புங்குடுதீவில் சிறிலங்கா கடற்படையினரால் கடந்தசில நாட்களுக்கு முன்னர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்யப்பட்ட இளையதம்பி தர்சினியின் கொலையைக் கண்டித்து நேற்று கிளிநொச்சியில் கண்டன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கண்டன ஊர்வலத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு தமது கண்டன கோசங்களை எழுப்பினர். நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் தமிழீழக்காவல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கல்வி நிறுவனங்களுக்கு அருகிலுள்ள படைத்தளங்களை அகற்றக் காலக்கெடு!

### – பாரிய வெகுஜனப் போராட்டத்திற்கு அழைப்பு

கற்றலுக்கு சுமுகமான நிலையை உருவாக்கும் முகமாக எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் தமது கல்வி நிறுவனங்களுக்கு அருகில் உள்ள படைத்தளங்கள் அகற்றப்படவேண்டும். இல்லையேல் தாம் பாரிய எடுப்பிலான வெகுஜன போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாக யாழ்ப்பாண உயர் கல்வி நிறுவனங்களின் அமையம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று யாழ்ப்பாண போர் நிறுத்தக்கண்காணிப்பு குழுவினிடம் கோரிக்கை மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சனாதிபதிக்கு கையளிக்கவென கோரிக்கை மனு ஒன்றை உயர் கல்வி நிறுவனங்களின் அமையம் யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் கையளித்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா இராணுவத்திற்கு உதவியளித்தால் தமிழகம் காஷ்மீராக மாறும் - வைகோ எச்சரிக்கை

சிறிலங்கா இராணுவத்திற்கு இந்தியா உதவக்கூடாது. அவ்வாறு இந்தியா உதவினால் தமிழகம் காஷ்மீராக மாறும் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலர் வைகோ தெரிவித்துள்ளார். தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலர் சுப.வீரபாண்டியன் எழுதிய பெரியாரின் இடதுசாரி "தமிழ் தேசியம்" என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது வைகோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவின் தேசிய மொழிகள் பட்டியலில் தமிழ் இல்லையென்றாலும் வேற்றுமையில் ஒன்றுமை என்ற கொள்கையை ஏற்றுக் கொள்கின்றேன்.

அதே நேரத்தில் தமிழகத்திற்கு ஆபத்து வந்தால் தேசிய இனத்தின் உரிமைக்காக போராட வேண்டிய சூழல் உருவாகும். மதத்தால் பாகிஸ்தானும், இனத்தால் அயர்லாந்தும், மொழியால் வங்காள தேசமும் பிரிந்தது போன்றதொருநிலை இந்தியாவிற்கு வந்துவிடக் கூடாது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# காணிதொடர்பான முக்கியஅறிவித்தல்

ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ளடக்கப்பட்ட பிரதேசங்களில் அரச/ பொதுத்தேவைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட அரச காணிகளை எவரும் அத்துமீறி பிடிக்காத வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிகளுக்குரிய நிறுவனம் /திணைக்களம் /சபை தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிக்குள் விளம்பரப்பலகை ஒன்றினை மக்கள் பார்வையிடக்கூடியதாக நாட்டி காணியை அடையாளப்படுத்திப் பாதுகாக்குமாறு வேண்டுகின்றோம்.

ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசகாணிகளை எவரும் அத்துமீறி கையகப்படுத்தியிருப்பின் அல்லது ஆட்சிப்படுத்தியிருப்பின் அக்காணிக்குரிய நிறுவனம்/ திணைக்களம் / சபை தமது காணி என்பதற்கான ஆதாரத்துடன் அக்காணி தொடர்பான தற்போதைய நிலையையும் பொறுப்பாளர்,காணிப்பகுதி, தமிழீழ நிர்வாகசேவை நடுவப்பணியகம் ,பாரதிபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள, அனுமதிப்பத்திரம் பெறாதுள்ள காணிகளை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இக்காணி ஒன்றினை விற்கவேண்டிய அத்தியாவசியதேவை ஒருவருக்கு ஏற்படின்,அவர் அம் மாவட்டத்திற்குரிய தமிழீழ நிர்வாகசேவை காணிப்பகுதியுடன் தொடர்புகொண்டு அதன் அனுமதியினைப் பெற்றபின்னரே விற்பனைசெய்தல் வேண்டும் இவ்அறிவித்தல் வெளியிடப்படும் நாளிலிருந்து அனுமதி பெறப்படாது காணிவிற்பனை செய்யப்பட்டால்,சம்பந்தப்பட்டவர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

காணிப்பகுதி,
தமிழீழ நிர்வாகசேவை,
நடுவப்பணியகம், கிளிநொச்சி.

(சி.13592)



# இலங்கை - ஜேர்மன் அபிவிருத்தி நிறுவனம்

gtz Partner for tha Future Worldwide

## பணிநிலைக்கான வெற்றிடம்

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (ஜீ.ரி.சற்) தேச நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான அமைச்சுடனும், மாகாண மாவட்ட, பிரதேச மட்டங்களிலுள்ள பங்குதாரர்களின் பங்களிப்புடன் யுத்தத்தாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்ட திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் பொருளாதார, பௌதீக, சமூக கட்டமைப்புக்களின் மீள் நிர்மாணத்திட்டங்களுக்கு உதவிகள் வழங்கிவருகிறது.

ஜீ.ரி.சற் நிறுவனம் பொருத்தமான தராதரமும், தகைமையுமுடைய ஒருவரை தொழில்நுட்ப மேற்பார்வையாளர் பதவிக்கு தெரிவு செய்யவுள்ளது.

## பணிநிலைக்கான வெற்றிடம்

**தொழில்நுட்ப கள மேற்பார்வையாளர்**

**கடமைகள்**

**கட்டுமான கள மேற்பார்வை**

- வாராந்த தொழில்நுட்ப அறிக்கைகள் தயாரித்தலுக்கும், தரநிர்ணய திட்ட கட்டுப்பாட்டு விடயங்களுக்குமாக முன்னொழுங்கு செய்யப்பட்ட, இணங்கப்பட்ட கள பார்வையிடல் அட்டவணைப்படி தினசரி களத்தினைப் பார்வையிடல்.
- நேர அட்டவணைப்படி வேலை முன்னேற்றத்தைச் சோதனையிடல்.
- கணியச்சிட்டை மற்றும் வரைபடங்களுக்கு அமைய அளவீடுகள் மற்றும் நடைபெற்ற வேலையின் அளவு என்பனவற்றைச் சரிபார்த்தல்.
- பிரதேசசபை மற்றும் பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், திட்டமுகாமையாளர்கள், வடபுனரமைப்புத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் ஆகியோருடன் நிரந்தரத் தொடர்புகள் வைத்து அடிப்படை தொழில்நுட்ப அறிக்கை மூலமாக கள முன்னேற்றத்தினை அறிவித்தல்
- குறுகிய முன்னறிவித்தலில் களத்திற்குச்சென்று எழும் பிரச்சினைகள் பற்றி அறிந்து அவற்றினைத் தீர்த்தல்.

**சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நிபுணத்துவ ஆலோசனை**

- செய்யப்படும் பௌதீக உட்கட்டுமான அமைப்பு வேலைகளுக்குத் தேவையான அடிப்படை தொழில்நுட்ப மற்றும் இதர தகவல்களை உள்ளூர் அதிகாரிகளுக்கும், ஒப்பந்த பங்காளிகளுக்கும் கொடுத்து உதவுதல்.
- வரைபடங்கள், கணியச்சிட்டைகள், வேலைத்திட்டங்கள், நேரஅட்டவணைகள் போன்ற கேள்விப்பத்திரங்களைத் தயாரிக்க உள்ளூர் பங்காளிகளுக்கும், ஒப்பந்தப் பங்காளிகளுக்கும் உதவுதல்.
- ஜீ.ரீ.இசட். வதிவிடப் பொறியியலாளருக்கு ஒப்பந்த வேலைத்திட்டப் படிமுறைகளில் எழக்கூடிய பிரச்சினைகளுக்கு உதவிசெய்தல்.
- வடக்கில் உள்ள ஜீ.ரீ.இசட். ஒப்பந்த பங்காளிகள் (யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/முல்லைத்தீவு) மற்றும் கொழும்பிலுள்ள ஒப்பந்த முகாமை ஆகியோருடன் ஒரு இணைப்பிணை வைத்திருத்தல்.
- உள்ளூர் அதிகாரிகளுக்கும் ஒப்பந்த பங்காளிகளுக்கும் ஒரு பொருந்தக்கூடிய திட்ட கண்காணிப்பு முறையை (உதாரணமாக நிர்மாணப் பதிவேடு) உருவாக்க உதவுதலும் திட்ட முன்னேற்ற அறிக்கையுடன் இதனை சரிபார்த்தலும்.
- சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர் மற்றும் உள்ளூர் மானிய ஒப்பந்தம் பெறுநர்களின் செலவுச் சிட்டைகளை கணக்குப்படியும், தொழில்நுட்ப ரீதியாகவும் சரிபார்த்தல்.
- நிர்மாண முகாமைக்கு கிரமமாக அறிக்கைகள் சமர்ப்பித்தல்.

**விண்ணப்பிப்போர்**

- பொறியியல் துறையில் சான்றிதழ் பெற்றவராகவும் அனுபவமுள்ளவராகவும் இருப்பதோடு, நிர்மாணத் துறையில் குறைந்தது எட்டு வருடங்கள் அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- தமிழ் மற்றும் ஆங்கில தொழில்களில் தேர்ச்சியடைந்தவராக இருத்தல்வேண்டும்.
- அறிக்கை தயாரித்தலிலும் தொடர்பாடலிலும் அதிக தேர்ச்சியுடையவராக இருத்தல்வேண்டும்.
- எல்லாவற்றிற்கும் ஈடுகொடுக்கக் கூடியவராகவும் துடிப்புள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- வேலையாட்களை வழிநடத்தக் கூடியவராகவும் கிராமமக்களுடன் கூட்டங்களை நடத்தக்கூடியவராகவும் இருத்தல்வேண்டும்.

**விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய முகவரி:-**

**முதன்மை ஆலோசகர்,**
**472, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 01.01.2006**

(சி.13594)


# பாலமோட்டை காட்டுப் பகுதியில் அழுகிய நிலையில் பெண்ணின் சடலம்

(அலுவலக செய்தியாளர்)

பாலமோட்டை பகுதியில் காட்டுக்குள்ளிருந்து அழுகிய நிலையில் பெண்ணின் சடலம் கடந்த 20ஆம் திகதியன்று மாங்குளம் காவல்துறையினால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பிரேத அறையில் விசாரணையின் பொருட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சடலம் தொடர்பான விசாரணையினை கிளிநொச்சி மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி வைத்தியர் கே.வி.கே. திருலோகமூர்த்தி நேற்றுப்பகல் மாவட்ட வைத்தியசாலையில் வைத்து மேற்கொண்ட பொழுது சடலமாக மீட்கப்பட்டவர் உயிலங்குளம் துணுக்காயைச் சேர்ந்த தயசோதா என இறந்தவரின் சகோதரியினால் அடையாளம் காட்டப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து சடல பரிசோதனைக்கு சடலத்தை உட்படுத்தும் வண்ணம் மரண விசாரணை அதிகாரி பணிப்புரை விடுத்தார். மரணம் தொடர்பான மேலதிக விசாரணையினை மாங்குளம் காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)


வரிவிளம்பரம்

**கிளி-சீமெந்துக்கல் ஆக்கம்**

வேலித்தூண்கள், சீமெந்துக்கல், பூக்கல்வகை, பூச்சாடிகள், அழகுத்தூண்கள் என்பன நியாய விலைக்கு விற்பனைக்கு உண்டு. வைத்தியசாலையின் ,கிளிநொச்சி. (7154)



## O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்காக ஆரம்பமாகின்றது கணனிக் கற்கை நெறிகள்

ஆரம்பம் : 01 – 01- 2005

**Diploma in MS OFFICE**
- MS Word
- MS Excel
- MS Access
- MS Power point

3 Months

**Diploma in hardware technology**
**Certificate in adobe Photoshop**
**Certificate in adobe premiere**
**Certificate in flash**
**Diploma in computer programming**
- Java
- C++
- C#
- Visual basic 6.0

பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்

பதிவு செய்யும் இறுதிநாள் : 31 – 12 – 2005
பதிவுகளுக்கு : நிலவு கணனித் தொழில்நுட்பம் கச்சேரி அருகாமை, கிளிநொச்சி

ஏமது ஏனைய சேவைகள்
- A/L . ஆண்டு 10 மாணவர்களுக்கான GIT பரீட்சைக்குரிய வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
- இணையத்தள வடிவமைப்பு
- கணனி மென்பொருள் வடிவமைப்பு
- சிங்கள வகுப்புக்கள்

**நிலவு கணனித்தொழில் நுட்பம்**

கச்சேரி அருகாமை (சி-13593) கிளிநொச்சி.



# 5ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணின் மலராக 27 - 03 - 1963



மண்ணில் விதையாக 22 - 12 - 2000

## லெப்டினன்ட் வீரக்கோன்

**(இம்ரான் பாண்டியன் படையணி)**
**கணபதிப்பிள்ளை சோதிநாதன்**

விடுதலைக்காய் வித்தாகிப்போன வீரமறவனே
ஐந்து ஆண்டுகள் சென்றதையா உமைப்பிரிந்து
தாயையும் தந்தையையும் இப்போ
உம்மோடு இணைத்துக்கொண்டீர்
உங்கள் பிரிவினால் நாம் வாடுகிறோம்.

*ப.பாலா,*
*இல.707, 7 ஆம் யூனிற்*
*இராமநாதபுரம்.* (7167)

உங்கள் பிரிவால் துயருறும்,
**குடும்பத்தினர்.**

# மீண்டும் சுனாமி ஏற்பட வாய்ப்புள்ளது

# எச்சரிக்கிறார் இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்

(லண்டன்)

**சுமாத்ரா தீவில் மீண்டும் பயங்கர பூகம்பம் ஏற்பட்டு சுனாமி ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளது என்று இங்கிலாந்து ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார். இதனால் இந்தியா, இலங்கை நாடுகளை மீண்டும் சுனாமி தாக்கும் அபாயம் உள்ளது.**

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவை மையமாகக் கொண்டு கடலுக்கடியில் கடந்த ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி பயங்கர பூகம்பம் ஏற்பட்டது.

கடலுக்கடியில் ஏற்பட்டதால் சுனாமியாக உருவெடுத்தது. இந்தியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, இலங்கை உட்பட பலநாட்டு கடல்களில் இராட்சத அலைகள் உருவாகிக் கரையைத் தாக்கின.

இச்சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் இன்னும் முழுமையாக மீளவில்லை. இந்த நிலையில் சுமாத்ராதீவில் மீண்டும் பயங்கர பூகம்பம் ஏற்பட்டு சுனாமி ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று இங்கிலாந்தைச் சேர்ந்த சுற்றுப்புற சூழல் ஆராய்ச்சியாளர் ஜான்மெக்லோஸ்கி கூறியுள்ளார். இங்கிலாந்தின் உல்ஸ்டர் பல் கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ள மெக் லோஸ்கி சுமாத்திராதீவு அருகே உள்ள மெந்துவாய் தீவுக் கூட்டத்தில் ஆய்வு மேற் கொண்டார். இந்தத் தீவுக் கூட்டத்தில் உள்ள சைபருட் என்ற சிறியதீவின் கடலுக்குள் மிகப்பெரிய அளவில் பூகம்பம் ஏற்படும் என்று தெரிவித்துள்ளார்.


கடந்த ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதியும் மற்றும் இந்த ஆண்டு மார்ச் 28 ஆம் திகதி ஆகிய நாட்களில் ஏற்பட்ட பூகம்பத்தால் சுமாத்ரா தீவின் பூமியின் அடித்தள அமைப்பு மாறியுள்ளது.

இதனால் மாபெரும் ஆபத்து ஏற்படும். உலகில் மற்றொரு பேரழிவை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் பயங்கர பூகம்பம் மற்றும் சுனாமி ஏற்படும் என்று மெக்லோஸ்கி எச்சரித் துள்ளார். மெக்லோஸ்கியுடன் இணைந்து பணியாற்றும் இந்திய சுற்றுச்சூழல் ஆராய்ச்சி யாளர்கள் மேக்லோஸ்கியின் எச்சரிக்கையை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று தெரிவித்துள்ளனர்.



சீனாவின் ஜியான் நகரில் அரசுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்றவரைப் பொலிசார் பிடித்துச் செல்கின்றனர்.

சுனாமி முத்திரை



தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் சுனாமி பேரழிவின் முதல் ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு தபால் முத்திரை வெளியிடப்பட்டது.

# லண்டன் குண்டுவெடிப்பு சந்தேகநபர் மீண்டும் லண்டன் வந்தபோது கைது

(லண்டன்)

லண்டனில் கடந்த யூலை மாதம் ஏழாம் திகதி சுரங்க ரயில்களில் தொடர் வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெற்றது.

இதில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் பலி யானார்கள். 100 இற்கும் மேற்பட்டவர்கள் காய மடைந்தனர்.

இந்த நிலையில் யூலை 21 ஆம் திகதியும் லண்டனில் நான்கு இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதல் முயற்சி நடந்தது. ஆனால் பொலி சாரின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரண மாக உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்த வெடிகுண்டுத் தாக்குதல் தொடர்பாக ஏற்கனவே நான்கு பேரை லண்டன் பொலிசார் கைது செய்தனர். வேறு சிலரைப் பொலிசார் தேடி வந்தனர். இந்த வழக்கில் 21 பேர் மீது லண்டன் பொலிசார் வழக்குப்பதிவு செய் துள்ளனர்.

இந்த வழக்கில் தேடப்பட்டு வந்த முக்கிய குற்றவாளி நேற்று முன்தினம் லண்டனில் கைது செய்யப்பட்டார்.

வெடிகுண்டுத் தாக்குதல் நடத்திவிட்டு வெளிநாட்டுக்குத் தப்பி ஓடியவர் ஆறு மாதங்களுக்கு மேலாக தலைமறைவாக இருந் தார்.

எதியோப்பிய நாட்டின் ஆடிஸ் அப்பாஸ் நகரில் இருந்து விமானத்தில் லண்டன் வந்து சேர்ந்த அவரை விமான நிலையத்திலேயே பொலிசார் கைது செய்தனர்.

லண்டன் நகரில் மீண்டும் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் அவர் வந்த தாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். ஆனால் அவரது பெயரைப் பொலிசார் வெளியிடவில்லை.



2003 துருக்கியில் நடந்த தொடர் குண்டு வெடிப்புக்குக் காரணமான அல்ஹைதா தீவிரவாதி பெவ்ஸி இடிசை துருக்கிப் பொலிசார் இஸ்தான் புல் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தனர்.

# பலஸ்தீன தீவிரவாதிகளால் இரு ஆசிரியர்கள் கடத்தல்

(காஸா)

காஸாப் பகுதியில் வைத்து இரண்டு பாடசாலை ஆசிரியர்கள் பலஸ்தீன ஆயுத தாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

காஸாவிலுள்ள அமெரிக்க தனியார் பாடசாலையின் அதிபரும் உப அதிபருமே கடத்திச் செல்லப்பட்டவர்கள் எனவும் இருவரும் நெதர்லாந்து மற்றும் அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்தவர்களெனவும் தெரிவிக்கப்படுகின்றது. இருவரும் நேற்றுக்காலை காரில் தமது கடமைக்குச் சென்றுகொண்டிருந்த போதே கடத்தப்பட்டுள்ளனர்.

இதே வேளை பலஸ்தீனத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடை பெறவுள்ள நேரத்தில் நடைபெறும் இவ்வாறான சம்பவங்களை பலஸ்தீன சனாதிபதி மொகமட் அப்பாஸ் கட்டுப்படுத்தத் தவறினால் அவர் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுமென அவதானிகள் கூறியுள்ளனர்.



அமெரிக்க, மியாமி கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் விமானம் நடுவானில் வெடித்துச் சிதறியது. இதில் பயணம் செய்த 20 பேர்பலியாயினர். சம்பவம் நடந்த இடத்தில் உலங்குவானூர்தி மற்றும் படகுகள் மூலம் தேடும் பணியில் ஈடு பட்டுள்ளமீட்புக் குழுவினர்.

# எல்லைப் பிரச்சினை தொடர்பாய் இந்தியா – பாகிஸ்தான் பேச்சு

(புதுடில்லி)

சர்ச்சைக்குரிய சர்கிரீக் எல்லைப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே செவ்வாய்க்கிழமை தொழில்நுட்ப அளவிலான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

டில்லியில் செவ்வாய்க்கிழமை இப் பேச்சு வார்த்தை நடைபெற்றது. இந்தியத் தரப்பில் நில அளவைத் துறை உயர் அதிகாரி கிரீஷ் குமாரும், பாகிஸ்தான் தரப்பில் அந்நாட்டின் உயர் அதிகாரி ஜமீலுர் ரகுமானும் கலந்து கொண்டனர்.

# சதாம் மீதான வழக்கு விசாரணையில்

# முதலாவது சாட்சி நேரடியாகச் சாட்சியமளித்தார்

(பாக்தாத்)



ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணையில் முதலாவது சாட்சி நேரடியாக நீதி மன்றத்தில் தோன்றி சாட்சியம் அளித்துள்ளார்.

சதாம் ஹுசைன் தொடர்பாக இதுவரைச் சாட்சியம் அளித்த எட்டுபேரும் தமது உயிருக்கு ஆபத்து வருமெனப் பயந்து திரைமறைவிலேயே இதுவரைச் சாட்சியமளித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை சதாம் ஹுசைன் நேற்று நடைபெற்ற நீதி விசாரணையின் போது ஆஜராகியிருந்தார். அவர் கடந்த வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்திற்கு ஆஜராகாது நீதிமன்றைப் பகிஷ்கரித்திருந்தார். நீதிமன்ற விசாரணைகள் ஒரு ஏமாற்று வேலை எனவும், அப்போது குறிப்பிட்டிருந்ததோடு தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாம் குறித்தும் முறைப்பாடு செய்திருந்தார்.

பாக்தாத்தின் வடபகுதியில் உள்ள உஜெல் என்னுமிடத்தில் 148 பேர்கொலை செய்யப்பட்டமை தொடர்பாக சதாம் ஹுசைனும், ஏனையோரும் தண்டிக்கப்படவேண்டும் என வழக்குத் தொடு நர்கள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைதிகளைத் தாக்கிய அமெரிக்க படைகளுக்குத் தண்டனை

(பாக்தாத்)

ஈராக்கிலுள்ள அமெரிக்கப்படை அந்த நாட்டில் கைது செய்தவர்களை உதைத்தும், துடைப்பத்தால் அடித்தும் துன்புறுத்திய ஐந்து அமெரிக்க சிப்பாய்களுக்கு, இராணுவ நீதி மன்றில் ஒரு மாதம் முதல் ஆறு மாதம் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஈராக்கில் அதிபர் சதாம்ஹுசைன் ஆட்சியை அகற்றிய அமெரிக்க இராணுவம் எதிர்த்துப் போராடும் தீவிரவாதிகளைக் கைது செய்கிறது. கடந்த செப்டெம்பர் மாதம் ஏழாம் திகதி கைது செய்தவர்களை சிறைக்குக் கொண்டு போகும் வழியில் துன்புறுத்தியதாக சிப்பாய்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

கைதிகளை முழங்கையால் குத்தினர், காலால் உதைத்தனர், துடைப்பத்தால் அடித் தனர் என்றெல்லாம் குற்றச்சாட்டு எழுந்தது.

அதைத் தொடர்ந்து 75 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த ஐந்துபேர் மீது இராணுவ நீதிமன்றில் விசாரணை நடந்தது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்ட னர். அதைத் தொடர்ந்து சிப்பாய்களுக்கு ஒரு மாதம் முதல் ஆறு மாதம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதில் இரண்டு பேர் மீது குற்றச் சாட்டுக்கள் கடுமையானவை என்று அவர்கள் இராணு வத்தில இருந்து நீக்கப்பட்டனர்.

# சுயத்தை இழக்காதுவாழ தடையாகவிருக்கும் எந்தவொரு சக்தியையும் அனுமதியோம்

## - பெண்கள் பண்பாட்டு மையம் அறிவிப்பு

**தமிழீழப் பெண்கள் தமது சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாடவும், சுயத்தை இழக்காது கௌரவமாக வாழ்வதற்கும் விரும்புகின்றனர். இதற்கு தடையாக இருக்கும் எந்தவொரு சக்தியையும் எமது மண்ணில் அனுமதிக்கப்போவதில்லை என புங்குடுதீவில் சிறிலங்கா கடற்படையினரால் தர்சினி என்ற யுவதி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து பெண்கள் பண்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

புங்குடுதீவு மடத்துவெளி சிறிலங்கா கடற்படையினரின் முகாமுக்கு அருகில் உள்ள கிணற்றில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட பெண்ணிற்கு நிகழ்ந்த கோரச்சம்பவத்தை பெண்கள் பண்பாட்டு மையத்தினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நீண்டகாலமாக நில ஆக்கிரமிப்பையும், கடல் ஆக்கிரமிப்பையும் ஏற்படுத்திய சிறிலங்காப் படையினர் மூலம் எமது பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கும், அதன்பின்னர் கொலை போன்ற பயங்கரமான சீர்கேடுகளுக்கும் உள்ளான சம்பவங்கள் தமிழீழ பெண்களான எமக்கு திரும்பத்திரும்ப படிப்பினையினையும், பயத்தினையும் எதிர்காலத்தில் முடங்கி ஒடுங்கப்போகின்ற அவநம்பிக்கையினையும் தோற்றுவித்துள்ளமை இந்த உலகம் அறிந்த உண்மை.

எனவே இந்தச்சம்பவம் இடம்பெற்ற விதமும் இதையே சுட்டிக்காட்டி நிற்கின்றது. சிங்கள ஆக்கிரமிப்பின் பின்னர் நிகழ்ந்த கோர அவலச்சம்பவங்களை அனுபவித்த பெண்கள் எமது மண்ணில் ஏராளம்.

கிருசாந்தி தொடக்கம் சாரதாம்பாளுக்கு அப்பாலும், இந்த உலகிற்கு வெளிக் கொணரப்பட்டவை சில, ஆனால் பெண்கள் மனதுக்குள்ளேயே புதைந்திருப்பவை ஏராளம். எமது பண்பாட்டின் படி இந்த அவலங்களை எவரும் வெளிப்படுத்துவதில்லை. தமிழீழப் பெண்களாகிய நாம் எம் சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாடவும், எமது சுயத்தினைச் சிதைக்காது விழிப்புற்று எழுச்சி பெற்று, சாதனை படைக்கவும் விரும்புகின்றோம். இதற்கு தடையாக இருக்கின்ற எந்தவொரு சக்தியினையும் இந்தநிலையில் எம்மால் அனுமதிக்க முடியாது என்பதனை இந்தச் சிங்கள அரசுக்கும், அரச படைகளுக்கும், மேலாண்மைவாத இனவாதிகளுக்கும் ஒரு பக்கம் மட்டுமே பேசும் சர்வதேசத்திற்கும் முன் சமர்ப்பித்து நிற்கின்றோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்ட பின்னர் மக்களின் இயல்புவாழ்க்கை ஓரளவுக்கு முன்னுரிமைப்படுத்தப்பட்ட நிலையிலும் கூட சிங்கள இராணுவத்தின் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த சான்றுகள் இன்னும் பல.

அண்மையில் ஈருருளியில் சென்றுகொண்டிருந்த சிறுமியினை சிங்கள இராணுவத்தினர் காலால் உதைத்து விழுத்தி காயங்களுக்குள்ளாக்கியமை, நீர்வேலியில் இடம்பெற்ற இராணுவத்தினரின் வல்லுறவு முயற்சி போன்று பல உள்ளன.

நாங்கள் பெண்களின் முன்னேற்றம், பெண் விடுதலைக்காக இயங்கும் அமைப்பு என்ற வகையில் சமூகத்தினுள் பெண்களிடையே எமது 'உயிர்பூக்குனர்' சுமந்து வந்த கதைகள் ஏராளம். பெண்களுக்கு இராணுவத்தினரால் ஏற்பட்ட, ஏற்பட்டுக் கொண்டிருக்கும் கொடூரங்களினால் அவர்களின் செயல் வலிமை முடக்கப்படுகின்றமையினையும், சீர்குலைக்கப்படுகின்றமையினையும், இந்த அனுபவங்களில் இருந்து மீண்டு எவ்வாறு வாழவிரும்புகின்றோம் என்பதை அழுத்தம் திருத்தமாக யாழ்ப்பாணத்தில் உள்ள அரச படைகளின் தலைமைத்துவத்திற்கு சர்வதேச பெண்கள் நாளிலே சுட்டிக்காட்டி 'பூவுக்குள் ஓர் பூகம்ப மடல்' ஒன்றை சமர்ப்பித்திருந்தோம். அது நடைமுறைப்படுத்தப்படுவதாக இல்லை. தொடர்ந்த வண்ணமே உள்ளது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நியாயம் கேட்ட வாடிக்கையாளர் மீது உணவக உரிமையாளர் தாக்குதல்

வவுனியா பேருந்து நிலையத்திற்கு அண்மையில் உள்ள உணவகம் ஒன்றில் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட வேண்டிய மிகுதிப் பணத்திற்கு பதிலாக ரொபி வழங்கியபோது அதற்கு மறுப்புத்தெரிவித்து நியாயம் கேட்ட வாடிக்கையாளர் மீது உணவக உரிமையாளர் மேற்கொண்ட தாக்குதலில்படுகாயமடைந்ததாக கூறப்படும். வாடிக்கையாளர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் செயலாற்று உதவிப்பணிப்பாளரான செல்லத்துரை குணராஜா (வயது-49) என்பவரே படுகாயமடைந்து சுயநினைவற்ற நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (10)

# தரம் ஒன்றில் தடம்பதிக்கும் சிறார்களுக்கான கௌரவிப்பு

ஆண்டு ஒன்றிற்கு பாடசாலை செல்லவுள்ள சிறார்களுக்கான கௌரவிப்பு விழா எதிர்வரும் 23ஆம் திகதி அன்று பிற்பகல் 3.00 மணியளவில் அம்பாள்குளம் குமா சிறுவர் பூங்காவில் இடம்பெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் தமிழீழ ஊரக வளர்ச்சிப்பணி நிர்வகிக்கும் சிறுவர் கல்வி ஊட்ட மேம்பாட்டுப்பணியை இலக்காகக்கொண்ட கலைமகள், சோழர், குமாசொக்கலிங்கம் ஆகிய சிறுவர் பூங்காக்களில் கல்வி, விளையாட்டு, அழகியல் செயற்பாடுகளில் பங்கேற்று ஆண்டு ஒன்றிற்கு பாடசாலை செல்லவுள்ள சிறார்களுக்கான கௌரவிப்பு விழாவே இந் நிகழ்வாகும். (தீ,கு)

# முகமாலை சோதனைச் சாவடியில் இளைஞர், யுவதிகளை தீவிரசோதனைக்கு உட்படுத்தும் இராணுவ புலனாய்வுத்துறை

முகமாலை சோதனைச்சாவடியில் பயணம் செய்யும் இளைஞர்கள், யுவதிகளிடம் படைப்புலனாய்வுத் துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ் குடாநாட்டில் பல்வேறு பிரதேசங்களில் கிடைக்கப்பெற்ற இளைஞர் யுவதிகள் குறித்தான தரவுகளை தம்வசம் வைத்திருக்கும் படைப்புலனாய்வுத்துறையினர் அப்பகுதியை சேர்ந்தவர்களிடம் அந்தந்தப் பகுதி இளைஞர்கள் யுவதிகள் குறித்து வருவோர் செல்வோரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மற்றும் படையினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளைக் காட்டியும் படையினர் விசாரணைகளை முடுக்கி இருப்பதாகவும் தெரியவருகிறது. (28)

# முச்சக்கர வண்டி ஓட்டுநர் வாழைச்சேனையில் கடத்தல்

வாழைச்சேனை மயிலங்கரையில் முச்சக்கர வண்டி ஓட்டுநர் இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார். கடத்தப்பட்டவர் பனிச்சங் கேணியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கார்த்திகேசு தயாபரன் (வயது-33) எனத் தெரியவருகிறது.

கடந்த திங்கட்கிழமை பனிச்சங்கேணியிலிருந்து ஓட்டமாவடிக்கு முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்தியவர்களை ஏற்றிச் சென்று அவர்களை ஓட்டமாவடியில் இறக்கிவிட்டு அங்கிருந்து மூவரை ஏற்றிக் கொண்டு பனிச்சங்கேணி திரும்பிக்கொண்டிருந்த போது முச்சக்கரவண்டியில் பயணம் செய்தவர்களை மயிலங்கரையில் இறக்கி விட்டபின்னர் ஆயுததாரிகளால் இவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

# மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, கடலுணவு சந்தைப்படுத்தல் பயிற்சித்திட்டம் மன்னார் மாவட்டத்தில் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கடல் உணவு சந்தைப்படுத்தலுக்கான பயிற்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஐ.எல்.ஏ. மற்றும் டானிடா நிறுவனங்களின் ஒரு இலட்சத்து 95 ஆயிரம் ரூபா நிதியுதவியுடன் கடல் உணவு சந்தைப்படுத்தலிற்கான பயிற்சித்திட்டம் மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட ஆறு கடலோரக் கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் கடல் உணவினை சந்தைப்படுத்தக்கூடிய தலா இரண்டு பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களிற்கு பயிற்சி வழங்கியதுடன் துவிச்சக்கர வண்டி, மீன்பெட்டி,தராசு போன்ற உபகரணங்களும் வழங்கப்பட்டன

இதேவேளை.மேட்டு நிலப் பயிற்செய்கைப்பயிற்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஐ.எல். ஏ. மற்றும் டானிடா நிறுவனங்களின் இரண்டு இலட்சத்து 12 ஆயிரம்ரூபா நிதியுதவியுடன் மன்னார் மாவட்டப் பொருண்மிய மதியுரையகத்தினால் மேட்டுநிலப்பயிர்ச்செய்கைக்கான பயிற்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இப் பயிற்சித்திட்டம் மடுப்பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பரிசங்குளக்கிராமத்தில் பத்து பயனாளிகளிற்கு பரீட்சார்த்தமாக வழங்கப்பட்டது. இவர்களுக்கு அவரை இனத்தானியங்களும் பயன் தரு மரங்களும் வழங்கப்பட்டுள்ளன. (கு,தீ)

# வவுனியாவில் சிறிலங்காப் படையினரின் கெடுபிடிகள் திடீரென அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்த இடங்களில் மீண்டும் இராணுவ மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் சோதனைச் சாவடிகள் இருந்த இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கும் பணிகளை இராணுவத்தினரும் பொலிசாரும் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படைகாப்புத் தரப்பினர் தமது சோதனைக் கெடுப்பிடிகளை அதிகரித்துள்ளதாகவும் இதனால் மக்கள் மத்தியில் ஒரு வித அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21,32)

# முதியவர் களுக்கு நிவாரணப் பொதிகள்

சுனாமியின் ஓராண்டு நினைவு தின நிகழ்வை முன்னிட்டு முல்லை பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் ஜேர்மன் செஞ்சிலுவைச்சங்க அனுசரணையுடன் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்கினார்.கடந்த 18ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன.இவ் வைபவத்தில் 300 இற்கும் மேற்பட்ட 60வயதிக்குமேற்பட்டவர்கள் பயன்பெற்றனர். (20)

# நீர்விநியோகம் பெறுவோர் பதிவுகளை மேற்கொள்க

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிக்கு நீர் இணைப்பு வழங்கும் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. மேற்படி நீர் விநியோகத்திட்டத்தின் புனர் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு நீரிணைப்பு வழங்கும் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நிறுவனங்கள், திணைக்களங்கள், கடைகள், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கிளிநொச்சி நீர் விநியோகசபை பொறுப்பதிகாரி காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு உரிய படிவங்களைப் பெற்று பூர்த்தியாக்கி சமர்ப்பித்து மதிப்பீட்டுக்குரிய கொடுப்பனவுகளை வங்கிக் கட்டளைகள் மூலம் செலுத்தி புதிய நீரிணைப்பினைப் பெற முடியும் என்பதனை அறியத்தருகின்றார்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர். (தீ,லோ)

# மண்டபம் திறப்பு

மன்னார் மாவட்டத்திலுள்ள பாலைப்பெருமாள் கட்டுக் கிராமத்தில் பலநோக்கு மண்டபம் ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினைமன்னார் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் ஏற்றினார். தொடர்ந்து கட்டடத்தினை பாலைப்பெருமாள் கட்டு கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாக உறுப்பினர் திறந்து வைத்தார்.

நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர் இதன்போது மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன. (18)

# வண்ணாங்குளம் கிராமத்தில் நிரந்தர வீடமைப்பதற்கான அடிக்கல்

(முல்லைத்தீவு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வண்ணாங்குளம் கிராம மக்களுக்கு ஜேர்மன் செஞ்சிலுவைச்சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச்சங்க முல்லைத்தீவு கிளையினரால்நிரந்தர வீடமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த சனிக்கிழமை வண்ணாங்குளத்தில் இடம் பெற்றது.- வண்ணாங்குளம்(ஏ) தற்காலிககுடி யிருப்புத் தலைவர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை கடற்புலிகளின் முல்லை நகரத்தளபதி தினேஷ், முல்லைத்தீவு பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் ஆகியோர் ஏற்றினார்கள். தொடர்ந்து அடிக்கல்லினை இலங்கை செஞ்சிலுவைச்சங்க முல்லைத்தீவு கிளைத்தலைவர் ஜெயகுலராஜா, முல்லைகடற்றொழிலாளர் கூட்டுறவுசங்கசமாசத்தலைவர், முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், தமிழீழ கடற்படை முல்லை நகரத்தளபதி, ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார், வண்ணாங்குளம் சென் ஜேம்ஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தலைவர் ஆகியோர் நாட்டினார்கள் இந்நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (20)

# காங்கேசன்துறை வீதியை அண்மித்த வீடுகளை அதிகாலையிலேயே திறந்துவிட படையினர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டின் வலிகாமம் வடக்குப்பகுதியில் உள்ள காங்கேசன் துறை வீதியை அண்மித்து குடியிருக்கும் பொது மக்கள் தமது வீடுகளை அதிகாலை 6.00 மணிக்கு முன்னர் திறந்து விடவேண்டும் என இராணுவத்தினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.**

வீடுகளை நாள்தோறும் இராணுவத்தினர் வந்து பார்வையிட வேண்டுமெனவும் இதற்கு வசதியாகவே வீட்டின் கதவுகளை அதிகாலையில் திறந்துவிட வேண்டும் எனவும் அத்துடன் ஒருவர் வெளியில் காத்திருக்க வேண்டுமெனவும் இராணுவத்தினர் அச்சுறுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக பொது மக்கள் மத்தியில் பலத்த குழப்பமான நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனைப் பொது அமைப்புக்கள் கண்டிப்பதுடன் இது பொது மக்களின் அடிப்படைச் சுதந்திரத்தைக் கூடப் பாதிக்கும் செயல் எனவும் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே இப் பகுதியில் உள்ள மக்கள் பல இடப் பெயர்வுகளுக்குள்ளாகி மீண்டும் வந்து குடியேறி யுள்ள நிலைமையில் இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடுகள் பொது மக்கள் மத்தியில் பெரும் சினத்தை ஏற்படுத்தியுள்ளது. (41)

# தென்மராட்சியில் இளைஞர்கள் மீது படையினர் மூர்க்கத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் சிறிலங்கா இராணுவத்தினரால் ஆறு தமிழ் இளைஞர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். கடந்த திங்கட்கிழமை முற்பகல் வரணி படைத்தளத்திற்கு அருகாமையில் இந்த இளைஞர்களை வழி மறித்த சிறிலங்காப் படையினர் கடுமையாக விசாரணை செய்த பின்னர் மிகவும் மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளார்கள். உந்துருளி மற்றும் தலைக் கவசங்களில் வெடிபொருட்கள் வைத்திருப்பதாகக் குற்றம் சுமத்தி இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாக தாக்குதலுக்குள்ளான பிரதீபன் என்ற இளைஞர் தெரிவித்துள்ளார். (41)

# யாழ்.இல் படையினரின் வெறியாட்டத்தை எதிர்த்து வவுனியா வளாகமும் போராட்டம்

(செட்டிகுளம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து நேற்று முன்தினம் முதல் யாழ். பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக மாணவர்கள் விரிவுரையாளர்கள் தமது எதிர்ப்பினைக் காட்டும் வகையில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்

கல்விச் சமூகத்தின் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளினை உடனடியாக இராணுவத்தினர் நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும், தமது உரிமைக்கான போராட்டம் நடத்திய கல்விச் சமூகத்தின் மீது காட்டு மிராண்டித்தனமாக இராணுவம் தாக்குதல் நடத்தியமை வன்மையான கண்டனத்திற்கு உரியதென்றும் வவுனியா வளாகம் தெரிவிக்கின்றது

தொடர்ந்து பகிஷ்கரிப்பினை மேற்கொள்வது தொடர்பாக வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா வளாகத்தின் மாநாட்டு மண்டபத்தில் விரிவுரையாளர்கள், மாணவர்கள் அடங்கிய குழுவினருக்கிடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் பின்னரே தொடர்ந்தும் பகிஷ்கரிப்பினை மேற் கொள்வது என்று முடிவுஎடுக்கப்பட்டுள்ளது.(21)

# அம்பனில் சிப்பாய்மீது கத்திக்குத்து!

யாழ்.வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களின் கத்திக்குத்திற்கு இலக்காகியுள்ளார். நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் அஜுத்குமார என்ற இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்துள்ளார்.

இவர் தற்போது பலாலி இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதேவேளை மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் சிறிலங்காக்கடற்படையினர் தேடுதல்களை நடாத்தியுள்ளனர். வீடுவீடாகச் சென்று கடற்படையினர் மேற்கொண்ட இந்தத் தேடுதலில் அப்பகுதி மக்கள் பல்வேறு துன் புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

# கூலிப்படைகளின் கொடூரத்தை எம்மால் பொறுக்கமுடியாது

## -யாழ். நல்லூர் கோட்ட தனியார் கல்வி நிலைய ஒன்றியம்

எமது கண்ணை மதித்துப் போற்றி நிற்கும் கல்வியாளர்களையும் எமது நாட்டின் எதிர்கால விளைநிலங்களான மாணவர்களையும், எமது கலாசார மேம்பாட்டின் பொக்கிசங்களையும் பெண்களையும், எமது இனத்தின் குரலாக ஒலிக்கும் பத்திரிகையாளர்களையும் கொன்றொழிக்க நினைக்கும் பேரினவாதத்தின் கபடத்தனத்தை இன்னுமா சர்வதேச சமூகம் தெரிந்து கொள்ளவில்லை. கூலிப்படைகளைக்கொண்டு கொடூரமாக நடத்தப்பட்ட தாக்குதல்களை இனியும் எம்மால் அனுமதிக்க முடியாது என யாழ். நல்லூர் கோட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விமான்களைக் கொன்றொழித்து பத்திரிகையாளர்களின் குரல் வளைகளை நசுக்கி, காடைத்தனம் புரியும் காட்டுமிராண்டித்தனத்திற்கு இனியும் பாடம் புகட்டாமல் இருக்க முடியாது. தேசவிடுதலையின் பங்கும், பணியும் ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு என்கின்ற உண்மையை எவராலும் மறுக்க முடியாது. இதனை பேரினவாதிகளும் சர்வதேச சமூகமும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். பல்கலைக்கழகத்தை முற்றுகையிட்டு மாணவர்களின் உணர்வுகளை அழிக்க நினைக்கின்ற சிங்களச் சிப்பாய்கள் ஆயுதம் இல்லாமல் எம்மோடு மோதிப் பார்க்கட்டும். அவர்களின் பேரினவாதவெறி, பலம் எல்லாம் எமது உரிமை உணர்வுகளுக்கு முன்னால் ஒரு தூசு, எங்களை நிராயுதபாணிகளாக்கி சிப்பாய்களை துப்பாக்கிகளுடன் மோதவிடுவது சர்வதேச சட்டத்திற்கு ஏற்புடையதா? அல்லது தர்மமானதா?

கல்வி மீது கண்மூடித்தனமாக நடத்தப்படும் பயங்கரவாதத்திற்கு இனியும் முற்றுப்புள்ளி வைக்காமல் இருக்க முடியாது. பேனாக்கள் சுமந்த எம் கைகளை துப்பாக்கிகள் சுமக்கும் கைகளாகப் பேரினவாதம் மாற்றியமைக்கும் என்றால் அதை நாம் முழுமனதுடன் ஏற்றுக்கொள்வோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# சங்கத்தானை ,அரசடிப் பகுதிகளில் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல்

## - பொதுமக்களும் விசாரணை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி சங்கத்தானை, அரசடிப் பகுதிகளை நேற்றுமுன் தினம் அதிகாலை 4.30 மணியளவில் சுற்றி வளைத்த சிறிலங்காப் படையினர் அங்கிருந்த வீடுகள் வர்த்தக நிறுவனங்கள், அரசடி அரசியல்துறை அலுவலகம் உட்பட அனைத்துப் பகுதிகளையும் சல்லடை போட்டுத் தேடுதலில் ஈடுபட்டதுடன், ஒவ்வொரு குடும்பத்தின் விபரங்கள் தொடர்பாகவும் கேட்டு அறிந்ததுடன், புலிகள் எவரேனும் வீடுகளில் மறைந்து இருக்கின்றார்களா எனப் பொது மக்களை அச்சுறுத்தி இருப்பதாகத் தெரியவருகிறது.

மற்றும் இச்சோதனை நடவடிக்கையின்போது அப்பகுதியால் பிரயாணம் செய்த பொதுமக்கள் பலர் படையினரால் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டதுடன், அடையாள அட்டைகளைக் காட்டுமாறும் பொதுமக்களை அச்சுறுத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது.

படையினரின் செயற்பாடுகள் குறித்து மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (28)

# புங்குடுதீவுப் பிரதேசத்துக்கான மின்வேலையை துரித கதியில் முடித்துத்தருமாறு வேண்டுகோள்

புங்குடுதீவுப் பிரதேசத்துக்கான மின் வேலைப் பணிகளை துரிதகதியில் முடித்து மின்சாரத்தை வழங்க சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென புங்குடுதீவுப் பிரதேச அபிவிருத்திக்குழு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

மின்கம்பங்கள் வந்து ஒன்றரை வருடங்கள் கடந்து விட்ட நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரே மின்கம்பங்கள் நடும் வேலைகள் பூர்த்தி அடைந்திருப்பதுடன், ஏனைய பணிகளையும் சம்பந்தப்பட்டோர் துரிதகதியில் மேற்கொண்டு விரைவாக இப்பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்க நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# 7000 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக டென்ஸ் நிறுவனம் அறிவிப்பு

யாழ்.குடாநாட்டில் டெனிஸ் வெடிபொருள் அகற்றும் நிறுவனத்தால் இதுவரை ஏழாயிரம் மிதிவெடிகள், அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் அகற்றப்பட்டிருப்பதாக அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறைப் பகுதியில் ஒரு இலட்சத்து தொண்ணூற்று இரண்டு ஆயிரத்து 364 சதுரமீற்றர் நிலப்பரப்பில் இருந்து இது வரை இரண்டாயிரத்து 173 வெடிபொருட்கள் அகற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் அவசர தேவையாக மிதிவெடிகளை அகற்றக் கோரும் பகுதிகள் சிலவற்றில் நவீன தொழில்நுட்பத்தை பயன் படுத்தி மிதிவெடிகளை அகற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.(28)

# இராணுவ காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்து சாவகச்சேரியில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(தென்மராட்சி)

யாழ்.குடாநாட்டில் படையினர் மேற்கொண்டுவரும் இராணுவ அடக்குமுறை மற்றும் புங்குடுதீவில் படையினர் மேற்கொண்ட பாலியல் வல்லுறவு, பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள் மீதான கொலை வெறித்தாக்குதல், மக்கள் மீதான படையினரின் நெருக்குவாரங்களைக் கண்டித்து நேற்று முன்தினம் சாவகச்சேரியில் ஒரு மணிநேர கண்டன ஆர்ப்பாட்டப் போராட்டம் இடம்பெற்றது.

அரச திணைக்களங்களின் அவையம் தென்மராட்சி வணிகர் சங்கங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் காலை 10 மணியிலிருந்து 11 மணிவரை நடைபெற்ற இப்போராட்டத்திற்கு சாவகச்சேரி வணிகர் சங்கத்தலைவர் மகாலிங்கம் தலைமை தாங்கினார்.

சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் ஒன்று கூடிய அரச ஊழியர்கள்,வணிகர்சங்கப்பிரதிநிதிகள், வணிகர்கள் அரசின் வன்முறையை எதிர்த்துக் கோசமிட்டதுடன் அரசின் வன்முறைகளைக்கட்டுப்படுத்துமாறும் படையினரின் பாலியல் வல்லுறவுச் செயல்களைக் கண்டித்தும் கோசங்களை எழுப்பினர். இதனைத் தொடர்ந்து கண்டனக் கூட்டம் இடம் பெற்றது. கண்டனக் கூட்டத்தை தொடர்ந்து சர்வதேசச் சமூகத்திற்கான மகஜர் ஒன்றினை, ஊர்வலமாகச் சென்று தென்மராட்சி பிரதேச செயலாளர் சீனிவாசனிடம் பிரதிகளை வழங்கினர். (28)

# யாழ். குடாவில் 15 பாடசாலைகளுக்கு நிகொட் தளபாட உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பதினைந்து பாடசாலைகளுக்கு நிகொட் நிறுவனம் தளபாடங்களை வழங்கி வருவதாகத் தெரியவருகிறது.

மிருசுவிலில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்,பளை வீரசிங்க மகா வித்தியாலயம், மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம் நாவற்குழி மகா வித்தியாலயம், தாவடி இந்து தமிழ்க் கலவன்பாடசாலை, உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம், கோப்பாய் நாவலர் வித்தியாலயம், நீர்வேலி கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, ஆவரங்கால் மகாஜனாக் கல்லூரி, மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், ஊர்காவற்றுறை சென்மேரிஸ் கல்லூரி, மண்டைதீவு மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கு யாழ். அரச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (28)

# தற்காலிக வியாபார இடங்கள் அறிவிப்பு

பண்டிகைக் காலங்களில் தற்காலிக வியாபாரங்களை மேற்கொள்ளும் இடம் குறித்த யாழ்.மாநகர சபை ஆணையாளர் சி.வி கே.சிவஞானம் அறிவித்துள்ளார். யாழ்.முனீஸ்வரன் வீதியில் மட்டுமே நடைபாதை வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் இடம்பெறும் என்றும் நகரின் ஏனைய பகுதிகள் எவற்றிலும் இம்முறை நடைபாதை வியாபார நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் நகரின் போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைக்கும் முகமாகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது (28)

# அடையாள அட்டை இன்றி பயணிப்போர் மீது குடாநாட்டில் படையினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மற்றும் யாழ். குடாநாட்டின் பல இடங்களில் வாகனங்கள், உந்துருளிகள் முச்சக்கரவண்டிகளில் பயணம் செய்வோர் படையினரால் மறிக்கப்பட்டு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அடையாள அட்டைகள் இன்றி பயணம் செய்த பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். கொடிகாமம், சங்கத்தானை, நீர்வேலி, யாழ். கச்சேரியடி, கோண்டாவில் பகுதிகளிலேயே சோதனை நடவடிக்கை என்ற பெயரால் பொது மக்கள் படையினரால் தாக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# ஏற்கனவே தோல்வி அடைந்த சர்வகட்சி மாநாட்டு நாடகத்தை மகிந்த மீண்டும் அரங்கேற்ற முயற்சி

வடக்கு கிழக்கு இனப்பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமாக சனாதிபதி மகிந்த சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி அவர்களின் அபிப்பிராயங்களை கேட்டறிவதற்கு சிந்தித்து வருகிறார். இது சம்பந்தமாக அரசியல் திட்டம் ஒன்றினை இப்பொழுது அமுல்படுத்தி வருகிறார்.

சர்வகட்சி மகாநாட்டை கூட்டுவதற்கு முன்னதாக சகல அரசியல் கட்சிகளையும் வரவழைத்து தனித்தனியாக இது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை நடத்தி அவர்களின் அபிப்பிராயங்களை கேட்டறிவதில் ஆர்வம் காட்டியுள்ளார். இதன் முதல் கட்டமாக ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய கட்சிகளுடன் தற்பொழுது பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஒற்றை ஆட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே மகிந்த ராஜபக்ஷவின் நோக்கமாகும். சனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களின் பொழுது ஒற்றை ஆட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வை காணப்போகிறேன் எனக்கூறி சிங்கள மக்களின் அதிக வாக்குகளைப் பெற்றார்.

போர் நிறுத்தத்தை மறுபரிசீலனை செய்தல்,நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்



மகிந்தராஜபக்ஷ

களின் அதிகாரங்களைப் குறைப்பது, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இந்தியாவை இணைத்துக்கொள்வது போன்ற தேர்தல் வாக்குறுதிகளை முன்வைத்து சிங்கள மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்றுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நேசக்கரங்களை நீட்டியிருப்பதுடன் மறுபக்கம் முப்படைகளையும் நாட்டில் யுத்தம் ஏற்பட்டால் அதை எதிர்கொள்வதற்குத் தயார் நிலையில் வைத்திருக்கின்றார். இதற்காக தற்பொழுது இந்திய கடற்படையுடன் இணைந்து போர் பயிற்சிகளையும் இலங்கை கடற்படைக்கு அளித்து வருகின்றார்.

சனாதிபதிப் பதவி ஏற்று இரண்டொரு வாரங்களில் இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்கள் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் போர் நிறுத்த உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்வதற்கு புலிகள் கடும் எதிர்ப்புகளை தெரிவித்துள்ளனர். போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைமை நோர்வே அரசிடம் இருப்பதால் நோர்வே ஏற்பாட்டாளரை அதில் இருந்து நீக்குவதற்கு அரசிற்கு தேவை ஏற்பட்டுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கைப்படி நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களை நீக்குவது இலங்கை அரசிற்கு இயலாத காரியமாகும். மகிந்தராஜபக்ஷ பதவி ஏற்று இரண்டொரு வாரங்களுக்கு இடையில் வடக்கு கிழக்கில் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ள வேளையில் சர்வ கட்சி மாநாட்டை கூட்டுவதில் சனாதிபதி அதிதீவிரமாக ஈடுபட்டு வருகின்றார். இராணுவத்தையும் பலப்படுத்தி வருகின்றார். மற்றும் இந்திய மாநிலங்களின் தேர்தல்கள் 2006ஆம் ஆண்டு "மே" மாதம் நடக்கின்றபடியால் சோனியா காந்திக்கு தென்னகத்தின் அரசியல் ஆதரவு தேவைப்படுகின்றது. இந்த சூழ்நிலையில் தலைவர் பிரபாகரன் அவர்கள் யுத்தத்தை ஆரம்பிக்கமாட்டார் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். அதே நேரத்தில் சனாதிபதி அவர்கள் சர்வகட்சி மாநாட்டை சனவரி மாதம் கூட்டுவதற்கு திட்டமிட்டுள்ளதுடன் பிரதான எதிர்க்கட்சியின் அபிப்பிராயங்களையும் கேட்டறிந்து கொள்வது மிக அவசியமாகும்.

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவுடன் சுதந்திரக்கட்சியும் இணைந்து சனாதிபதித் தேர்தலில் போட்டி இட்டபடியால் ராஜபக்ஷ 48 இலட்சம் வாக்குகளைப் பெற்றார். அதேநேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் 47 இலட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளார். இந்த இரண்டுகட்சிகளும் இணைந்து மொத்தமாக 99 சதவீதமான வாக்குகளைப் பெற்றுள்ளன. ஆனபடியால் சர்வகட்சி மாநாட்டின் முதலிடம் எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும். காரணம் சிறுபான்மை இனத்தவர்களின் முழு ஆதரவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு என்பதை இத் தேர்தல் நிரூபித்துள்ளது.

இதற்கு முன் நாட்டை ஆட்சி புரிந்த இரு சனாதிபதிகளான ஜே.ஆர், ஜயவர்த்தனா பிரேமதாசா இருவரும் சர்வகட்சி மாநாட்டை கூட்டினார்கள்.அதேபோல் சந்திரிகா அம்மையாரின் ஆட்சியிலும் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டு அரசியல் யாப்பை மாற்றும் திட்டத்தை முன்வைத்தார். இதற்கு முன்னதாக சந்திரிகா அம்மையார் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக செயற்குழுவை 80 தடவைகள் கூட்டி எடுத்த முடிவுகள் யாவைவும் எதிர்க்கட்சி எதிர்த்தபடியால் நிறைவேற்ற முடியாமல் போயிற்று 1984ஆம் ஆண்டு சனாதிபதி ஜே. ஆர்.ஜயவர்த்தனா சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார். இதற்கு இந்தியா தாதியாக கடமையாற்றியது. 1983ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அப் போதைய இந்தியப் பிரதமர் சந்தித்து இரண்டு நாடுகளின் அரசியல் உறவுகளைப் பலப் படுத்தினார்.

இலங்கை அரசியல் சம்பந்தமாக கவனிப்பதற்கு முழுப் பொறுப்புக்களையும் கோபால்சாமி பார்த்த சாரதியிடம் ஒப்படைத்தார். சர்வகட்சி மாநாட்டை கூட்டுவதற்கு இந்திராவிடம் ஜே.ஆர் ஜயவர்த்தனா சென்றபொழுது மாகாணசபை ஆட்சி என்ற ரீதியில் பிரதேச மட்டங்களில் ஆட்சிப பகிர்வினை வழங்கினால் சுலபமாக பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என இந்திரா அம்மையார் ஜே.ஆர் ஜயவர்த்தனவிடம் தெரிவித்திருந்தார்.

இவரை இணங்கவைப்பதற்கு சகல திட்டங்களையும் இந்திராகாந்தி வகுத்திருந்தார். பார்த்தசாரதி அவர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியிடம் சமர்ப்பித்த எழுத்து மூலப் பிரதியை ஜே.ஆர் ஜயவர்த்தனாவிடம் சமர்பித்த பொழுது வடக்கு கிழக்கு இணைந்த ஒரு தமிழ் மாகாணமாக இருந்தபடியால் ஜே.ஆர் ஜயவர்த்தனா அதை ஏற்றுக்கொள்ளவில்லை இதனால் பல பிரச்சினைகள் இங்கு ஏற்படும் என பார்த்தசாரதியிடம் சுட்டிக் காட்டினார். சர்வகட்சி மாநாட்டை இங்கு கூட்டி தீர்மானங்களை எடுப்பது அவசியம் என பார்த்தசாரதியிடம் எடுத்துக் கூறினார்.

எது எப்படி இருந்தாலும் 1984ஆம் ஆண்டு இனப்பிரச்சினைகள் சம்பந்தமாக ஜே.ஆர் ஜயவர்த்தனா அவர்கள் சர்வகட்சி மாநாட்டை கூட்டினார். அதில் பலகட்சிகள் பங்கேற்றன. ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இதில் பங்கேற்கவில்லை. அப்போதைய எதிர்க்கட்சி இதில் பங்கேற்காதபடியால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாமல் போயிற்று. ஆனால் மாகாணசபை சம்பந்தமாக முடிவொன்று எடுப்பதற்கு பாராளுமன்றத்தில் மேல்சபை ஒன்றைஏற்படுத்தி அதன் மூலமாக இப்பிரச்சினைக்குத்தீர்வு காணமுடியும் என்பதே ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் அரசியல் திட்டமாக இருந்தது. ஆனபடியால் ஜே. ஆர்.ஜயவர்த்தனாவின் திட்டம் நிறைவேறுவதற்குப் பல திட்டங்களை இந்தியா வகுத்திருந்த பொழுது 1986 ஆம் ஆண்டு இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டபடியால் அத்திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போயிற்று அதன் பிறகு ராஜீவ்காந்தி இந்தியப்பிரதமராகப் பதவி ஏற்றார். அப்பொழுது வடக்குகிழக்கில் யுத்தம் உக்கிரமடைந்திருந்தது. ஆனபடியால் சர்வகட்சி மாநாடு அத்துடன் குழிதோண்டிப்புதைக்கப்பட்டது.

பின் 1989ஆம் ஆண்டு ஆர்.பிரேமதாசா அவர்கள் பதவி ஏற்றபின் சர்வகட்சி மாநாட்டிற்கு சகல அரசியல் கட்சிகளையும் வரவழைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது அவசியம் என அவர் நினைத்தார். பழைய பாராளுமன்ற கட்டடத்தில் சர்வகட்சி மாநாடு ஆரம்பமாகியது. அம்மாநாட்டின் செயலாளராக பிரட்மன் வீரக்கோன் செயலாற்றினார். பிரேமதாசா ஆட்சியின் ஏ.சி.எஸ்.ஹமீட் அவாகள் இம்மாநாட்டிற்கு பலமுறை தலைமை தாங்கிநடத்தினார். இந்த சர்வகட்சி மாநாட்டில் விடுதலைப்புலிகளை அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள வைபதற்குப்பல திட்டங்களை ஆர்.பிரேமதாசா வகுத்திருந்தார்.

அத்துடன் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் முதலாவது பேச்சுவார்த்தை புலிகளின் பிரதிநிதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12ஆம் திகதி சர்வகட்சி மாநாடு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இதில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியை அறிமுகம் செய்வதற்காக அவர்களை அன்றைய சனாதிபதி ஆர்.பிரேமதாசா வரவழைத்திருந்தார். விடுதலைப் புலிகளின் சார்பில் யோகிமட்டும் கலந்து கொண்டார். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டு தடவைகள் கலந்து கொண்டது. பிறகு அவர்கள் சமுகமளிக்கவில்லை. பல தடவைகள் இந்த மாநாடு நடைபெற்றது. ஆனால் பிரேமதா சாவினால் இந்த சர்வகட்சி மாநாட்டில் பொருத்தமான தீர்வை முன் வைக்க முடியாமல் போனபடியால் அது தோல்வி கண்டது.


ஆனால் சனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்கள் ஏற்கனவே அரங்கேற்றி தோல்வி கண்ட சர்வகட்சி மாநாட்டின் நாடகத்தை மீண்டும் அரங்கேற்றுவதற்கு முன்வந்துள்ளார்.

மக்கள் வரம் தற்போதைய சனாதிபதிக்கு கிடைத்துள்ளபடியால்அவர் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவது அவசியமாகும். இந்த நாடகத்தில் ஐக்கிய தேசியக்கட்சியைப் பங்கேற்கவைத்தால் அது மகிந்தராஜபக்ஷவின் நாடகத்திற்கு ஒரு வெற்றி என நாம் கருதுகிறோம். இது சம்பந்தமாக கடந்தவாரம் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சனாதிபதி மகிந்தராஜபக்ஷவிற்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதேநேரத்தில் வடக்குக் கிழக்குப் பிரச்சினைகள் நாளுக்கு நாள் உக்கிரமடைந்த வண்ணமுள்ளது. அத்துடன்நோர்வே ஏற்பாட்டாளர்கள் சம்பந்தமாக பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் அரச தரப்பில் கிளம்பியுள்ளது. ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி ஆகிய இரண்டு கட்சிகளில் இருந்து நோர்வே ஏற்பாட்டாளர்கள் சம்பந்தமாக பல நெருக்கடிகள் கிளம்பியுள்ளன. அதே நேரத்தில் சர்வதேச சமூகத்திடம் இருந்து போர் நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து நடத்துவதற்கு சனாதிபதிக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவருடன் ஒரு உடன்படிக்கைக்கு வருவதற்கு முன் தெற்கில் உள்ள அரசியல் கட்சிகளுடன் இனப்பிரச்சினை சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டத்தில் சனாதிபதி உள்ளார்.

சர்வகட்சி மாநாட்டை நாங்கள் வரவேற்கிறோம். ஐக்கிய தேசியக்கட்சியினரை சர்வகட்சி மாநாட்டிற்குச் சம்மதிக்க வைத்தது போல தமிழ் தேசிய கூட்டமைப்பையும் இதில் கலந்து கொள்வதற்கு நடவடிக்கைகளை சனாதிபதி அவர்கள் மேற்கொள்ள வேண்டும். மக்களின் நல்லமதிப்பைப் பெற்றுள்ள மகிந்தராஜபக்ஷ அவர்கள் தனக்குச் சவாலாக இருக்கும் இனப்பிரச்சினையை எப்படித் தீர்த்து வைக்கப்போகிறார் என்பதை நாங்கள் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்



ஜே.ஆர்.ஜயவர்த்தனா

தமாக அவரின் நிலைப்பாட்டை விளக்கும் வரைக்கும் எம்மால் எதுவும் கூறமுடியாது. மகிந்தராஜபக்ஷ சர்வதேச சமூகத்தின் நெருக்குதல்களுக்கு இணங்கி நடப்பாரா

னால கட்சியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் எதிர்ப்புக்களைச் சம்பாதித்துக் கொள்ள நேரிடும். மற்றும் ஏனைய கட்சியினரின் வற்புறுத்தலுக்கு அடிபணிந்து மகிந்த செயற்படுவாரானால் சர்வதேச சமூகத்தின் எதிர்ப்புக்களைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். இதனால் விடுதலைப் புலிகளின் செல் வாக்கு சர்வதேச மட்டத்தில் அதிகரிப்பதை மகிந்தவினால் தடுக்க முடியாது. ஆனபடியால் சர்வதேசத்தின் உதவிகளை தேர்ந்தெடுப்பாரா? அல்லது ஏனைய கட்சிகளின் ஆதரவைத் தேர்ந் தெடுப் பாரா? கடைசியில் இவர் இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைத்தால் இந்நாட்டு மக்களும், சர்வதேச சமூகமும் இதை வரவேற்கும் இல்லாவிடில் யுத்த மூலம் இவர் இனப்பிரச்சியைத் தீர்ப்பதற்கு முயற்சித்தால் பெரும் அழிவையே சந்திக்கநேரிடும்.

லங்காதீப சிங்கள ஞாயிறு வாரநாளிதழ்,
ரஞ்ஜித் ஆனந்த ஜயசிங்க,
மொழியாக்கம்:-
அ.சக்திவேல்

# ஆழிப்பேரலை அழிவு குறித்து பொறுப்பாளர்கள் கூறமுன் தலைவர் மீட்பு நடவடிக்கைக்கு பணித்ததுதான் வரலாறு

## "ஆழிப்பேரலை ஒலிப்பேழை" வெளியீட்டு விழாவில் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே பாலகுமாரன்



*(கிளிநொச்சி)*

***அழிவுகளிலிருந்து மீள வேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் ஏற்படும் முன்னர் தேசியத்தலைவருக்கு ஏற்பட்டிருக்கிறது அனைத்து தளபதிகளுக்கும் பொறுப்பாளர்களுக்கும் இது தெரியும். இது விடயத்தில் இவர்கள் தலைவரிடம் சொல்வதற்கு செல்லும் போது அதற்கு முன்னரே தலைவர் எந்தச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று பணித்த வரலாறுதான் இங்கே நடந்த வரலாறு என்று விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.***

புலிகளின் குரல் வெளியீட்டுப் பிரிவினரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட "ஆழிப்பேரலை ஒலிப்பேழை" வெளியீட்டு நிகழ்ச்சியில் பாலகுமாரன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தன்னுடைய சொந்தப் பாதுகாப்பையும் புறந்தள்ளி அவர் செயற்பட்டது எல்லோருக்கும் தெரியும். மிஞ்சியோரும் மிஞ்சாமல் இறந்தோரும் மீட்கப்பட்ட வரலாறும் அனைவருக்கும் தெரியும். வீதியோடு கிடந்த சடலங்களைக் கூட பண்போடும் மரியாதை யோடும் மீட்டெடுத்த வரலாறு எங்களுக்கு உரியது.

சுனாமி பேரவலத்திற்கு எதிராக நாம் கிளர்ந்தெழுந்த விதம் உலகத்தினது வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பேரவலத்தையே பெருவாய்ப்பாக மாற்றிய தேசம் பேரவலத்திலிருந்து மீளக் கூடிய தேசம் என்று எங்களைப் பற்றிச் சொல்கிறார்கள் .

ஆச்சே மாகாணத்தில் தான் ஆழிப்பேரலை அவலம் நடந்தேறியது. அங்கே நடந்த விடுதலைப் போராட்டம் இன்று முற்றுப் பெற்று விட்டது. சிறிலங்கா அரசாங்கம் போல அங்கே உள்ள இந்தோனேசிய அரசாங்கம் இல்லாமல் அரசும் போராளிகளும் விட்டுக்கொடுத்தார்கள். போராளிகளது உறவுகள் இறந்திருந்தனர். பேச்சுகள் நடந்தன திட்டவட்டமான வரையறைகளுடான பேச்சுக்களையடுத்து இன்று அங்கு தீர்வு ஏற்பட்டுள்ளது. இருதரப்பும் ஏற்றுக் கொண்ட தீர்வு அது.

சுனாமியினால் உடலின் வெளிப்புற புண்ணுக்கு அப்பால் உளப்புண் என்று ஒன்று உள்ளது. அதை ஆற்றுவது காத்திரமான விடயம் அந்த உளவளத்துணைப் பணி இன்னும் தொடர்கிறது.

இசை பற்றிய ஆய்வு முழுமையடையவில்லை அது வெறுமையை தனிமையை நிரப்புகிறது உளவியல் ரீதியாக மனிதனது உச்ச வெளிப்பாடாக இருக்கிறது.

இசைக்கு மேலத்தேய கீழத்தேய என்று பிரிப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை

ஊடகத்தின் வரைவிலக்கணமே இடைவிடாது பிறரோடு தொடர்படைய வைப்பதுதான் எங்களது ஊடகங்கள் சில பிறரை கத்தரிக்கின்ற வேலையைச் செய்கின்றன. இதைக் கைவிட வேண்டும் என்றார்.

## மகிந்தவின் ஆலோசகராக சுனிமல் பெர்னாண்டோ நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகராக 'சுனிமல் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவராகவும், மீன்வளத்துறை அமைச்சராகவும் மகிந்த பொறுப்பு வகித்த போதும் சுனிமல் பெர்னாண்டோ ஆலோசகராகப் பணியாற்றினார்.

'மகிந்தவின் தந்தையார் டி.ஏ.ராஜபக்ஷ, ஜோர்ஜ் ராஜபக்ஷ ஆகியோருடனும் சுனிமல் பெர்னாண்டோ பணியாற்றியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொடக்க காலம் முதலே தீவிர ஈடுபாட்டாளராக செயற்பட்டு வரும் சுனிமல் பெர்னாண்டோ அக்கட்சியின் செயற்குழு உறுப்பினராகவும் உள்ளார்.

## சட்டவிரோத மதுபானங்களுடன் பாணந்துறையில் 75 பேர் கைது

பாணந்துறை குற்றத்தடுப்புப் பிரிவினரால் 10 இலட்சம் பெறுமதியான சட்டவிரோத மதுபானங்களுடன் 75 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.கடந்த இரண்டு தினங்களாக நாட்டின் 15 பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது இவர்கள் கைது செய்யப் பட்டதாக பாணந்துறை வலான குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி விஜித பெரேரா தெரிவித்தார்.

காலி,ரத்கம, மாத்தறை பிலியந்தலை அவிசாவளை ஹோமாகம ஆகிய பிரதேசங்களில் அதிகமான சுற்றிவளைப்புத் தேடுதல்கள் நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (32)

## முஸ்லிம் பாராளு.உறுப்பினர்களின் கூட்டியக்க சபை அமைப்பு

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு பொதுத்தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் கண்டுள்ளனர்.

இந்த தகவலை ஊடகத்துறை பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன் வெளியிட்டுள்ளார். பாராளுமன்ற கட்டடத்தில் கடந்த திங்கட்கிழமை கூடிய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப்பகுதியிலும் வாழும் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தனர்.

இதன் பின்னர் முஸ்லிம்கள் சம்பந்தமாக பொது இணக்கப்பாடு ஒன்றை எட்டும் வகையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் என்ற பெயரில் கூட்டியக்க சபை ஒன்றை அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

இந்த ஒன்றியத்தின் தலைவராக அமைச்சர் ஏ.எச்.எம் பௌசியும் உபதலைவர்களாக அமைச்சர் பேரியல் அஸ்ரப் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமும் தெரிவாகினார்கள் செயலராக அமைச்சர் அன்வர் இஸ்மாயில் நியமிக்கப்பட்டுள்ளார்.

## அரசின் விசாரணைக்குழுக்களால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கம் அமைக்கப்போகும் விசாரணைக்குழுவினால் எதுவும் நடைபெறப் போவதில்லை இந்த விசாரணைக்குழுக்களைப் பற்றியும் அவற்றின் அறிக்கைகள் பற்றியும் எமக்கு நல்ல அனுபவமுண்டு இதன் மூலம் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது என தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழக சமூகம் மீதும் மாணவர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் மேற்கொண்ட தாக்குதல்கள் குறித்து பாராளுமன்றத்தில் கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் நடத்தியதையடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் கடுமையான செயற்பாடு நிறுத்தப்பட வேண்டும் அங்கு விசாரணை வைக்க வேண்டிய அவசியமில்லை. பொதுமக்களை இராணுவம் தாக்கியுள்ளது. துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளது. இதன் மூலம் பலர் காயமடைந்துள்ளனர். ஆகவே இந்த நிலை மாறவேண்டும். அதைவிடுத்து விசாரணைக்குழு அமைத்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் அங்கு ஒன்றுமில்லை.

சபாநாயகர் அருகில் எங்களைச் சந்தித்த பிரதமர் சனாதிபதியுடன் பேசி உடனடியாக பதில் தருவதாகக் கூறினார். பின்னர் விசாரணைக் குழுவை நியமிக்க முடிவெடுத்திருப்பதாக எங்களுக்கு அறிவிக்கப்பட்டது. விசாரணைக்குழுவின் அறிக்கை வெளிவர பல வாரங்கள், பல மாதங்கள் ஏன் பல வருடங்களோ செல்லலாம். விசாரணைக் குழு பற்றியும் அவற்றின் அறிக்கை பற்றியும் எங்களுக்குப் போதிய அனுபவமுண்டு. ஆகவே, இதன் மூலம் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரக் கூடிய சூழ்நிலை இருக்குமென நினைக்கவில்லை என்றார்.

இது தொடர்பாக என்ன மாற்று யோசனையை நீங்கள் வைக்க உள்ளீர்கள் எனக் கேட்டபோது,

நாங்கள் இந்த விடயம் தொடர்பாக மேலதிகமாக என்ன செய்வது என்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். இது தொடர்பாக இன்று முடிவெடுப்போம். ஆனால், அந்த முடிவை எடுப்பதற்கு முன்னதாக அதைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மட்டு. பண்டாரியாவெளி, படையாண்டவெளி மக்கள் தற்காப்புப் பயிற்சி பெறுவதுபற்றி கலந்துரையாடல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பண்டாரியாவெளி, படையாண்டவெளி கிராம அமைப்புக்கள் ஒன்று கூடி தற்காப்புப் பயிற்சி பெறுவது தொடர்பாக கலந்துரையாடியுள்ளன. நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு பண்டாரியாவெளிப் பாடசாலை மண்டபத்தில் இக்கூட்டம் பண்டாரியாவெளி ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் சுரேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வாழும் மக்கள் தங்களின் பாதுகாப்புக் கருதி தற்காப்புப் பயிற்சிகளை எடுத்து வருகின்றார்கள். அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்காப்புப் பயிற்சிகளை எடுப்பதற்காக அனைத்து அமைப்புக்கள், மக்கள் ஏற்பாடு செய்து கொண்டு வருகின்றனர்.

இந்த வகையில் பண்டாரியாவெளி, படையாண்டவெளி ஆகிய கிராமங்களிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம், சிறுவர் பாதுகாப்பு நிறுவனத் தொடர்பாளர்கள், விளையாட்டுக் கழகம், கோயில் நிர்வாகம் ஆகிய அமைப்புக்கள் தங்களுடைய பிரதேசங்களில் தற்காப்புப் பயிற்சி எடுப்பது தொடர்பாக ஆராய்ந்தனர்

## லெப்.கேணல் மறவன் துணைப்படை பயிற்சிப்பாசறையின் 7 ஆவது அணி பயிற்சி முடித்து வெளியேற்றம்





(வடமராட்சி)

லெப்.கேணல் மறவன் கடற்படையின் துணைப்படை பயிற்சிப் பாசறையில், 7ஆவது அணியினரின் பயிற்சிகள் நிறைவடைந்துள்ளன. இப்பயிற்சிப் பாசறை நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் மருதங்கேணியில் நடைபெற்றுள்ளது.

மருதங் கேணியில் பிற் பகல் ஆரம்பித்த இந் நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ கடற்படையின் அரசியல்துறைப் பொறுப் பாளர் பூரணி ஏற்ற, தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட தமிழீழ கடற்படைத் தளபதி கலாத்தன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து லெப். கேணல் மறவனின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரினை வடமராட்சி கிழக்கு சமாச மேலாளர் குகன் ஏற்ற, மலர் மாலையை தமிழீழ கடற்படையின் மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றி வைக்க, வி.தர்மகுலசிங்கம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றது.

இறுதியாக 7ஆவது துணைப்படைப் பயிற்சியாளர்களுக்கு சிறப்புப் பரிசில்களை தளபதி கலாத்தன், தளபதி லோறன்ஸ் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

# பாதுகாப்பற்ற கிணற்றுள் தவறி வீழ்ந்த சிறுவர்களில் ஒருவர் பரிதாப மரணம்!

(அலுவலக செய்தியாளர்)

பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்த இரு சிறுவர்கள் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டு கிளி. மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட பொழுதிலும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் சிறுவன் ஒருவன் வைத்தியசாலையில் மரணமானார்.



காப்பாற்றப்பட்ட குழந்தையுடன் தாய்

மேற்படி சம்பவம் நேற்று முன் தினம் விசுவமடு குமாரசாமிபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் பிற்பகல் 2.30 மணி யளவில் வீட்டிலிருந்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் மேற்படி காணியிலிருந்த பாதுகாப்பற்ற கிணற்றுக்கருகாமையாகக் கூட்டமாகச் சென்ற பொழுதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

சடல பரிசோதனையினை மேற்கொண்ட கிளி. மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி கே.வீ.கே. திருலோகமூர்த்தி விபத்து மரணமென தீர்ப்பு வழங்கியதுடன் பெற்றோரினது கவனயீனமே இச்சம்பவத்திற்குக் காரணமென தெரிவித்தார்.

விசுவமடு குமாரசாமிபுரத்தைச் சேர்ந்த அ. அலெக்சன் (வயது- 3) என்ற சிறுவனே சம்பவத்தில் மரணமானார். ந. லக்சிகா (வயது- 2) என்ற சிறுமி காப்பற்றப்பட்ட நிலையில் தற்போது கிளி. மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

*சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால்*

# நலிவுற்றோர் கொடி தினம் கிளிநொச்சியில் அனுஷ்டிப்பு

(அலுவ்லக செய்தியாளர்)

கிளிநொச்சி சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் போரினாலும், பிற அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காக நலிவுற்றோர் கொடி தினம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்த கொடி தினமானது மேற்படி நிறுவனத்தின் தலைமைச் செயலகத்தில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக சேவை நலம் கொண்ட பெரியோர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன் இந்நிறுவனம் தனது சேவை நோக்கினையும், எண்ணப்பாடுகளையும் கிராம தரிசிப்புகள் மூலம் வெளிப்படுத்தவும் உள்ளது.

எனவே, சமூக சேவை நோக்குடையோரையும் தம்முடன் இணைந்து செயற்படுவதற்கு ஆர்வலர்கள், சமூக சேவையாளர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறும் வேண்டிக்கொள்கின்றனர். (கு.தீ)


# ஐந்தாம் ஆண்டு நினைவு நாள்

2000.12.22 அன்று யாழ்.கைதடி, கோப்பாய் அரியாலைப் பகுதியில் சிறிலங்காஇராணுவத்துடனான மோதலின் போது வீரச்சாவடைந்த வட்டக்கச்சிப்பிரதேச எல்லைக்காப்பு படை மாவீரர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாள். மாவீரர்களான:-

01.கப்டன் பரசுராமன் புதுக்காடு இராமநாதபுரம்
02.வீரவேங்கை தயாபரன்/தயா - இராமநாதபுரம்
03.வீரவேங்கை இக்கியராசா/அப்பன் -சந்தையடி, வட்டக்கச்சி
04.வீரவேங்கை சிவராசா-சந்தையடி வட்டக்கச்சி
05.வீரவேங்கைகுட்டி/சங்கர் -சந்தையடி, வட்டக்கச்சி
06.வீரவேங்கை சேகர் -சந்தையடி, வட்டக்கச்சி
07.வீரவேங்கை குணரத்தினம்/குணம் -ஜெயபுரம், வட்டக்கச்சி
08.வீரவேங்கை கலைச்செல்வன் -உடையார்வளவு வட்டக்கச்சி
09.வீரவேங்கை செளவுந்தராஜ்
10.வீரவேங்கை விமலச்சந்திரன்/குமார் -இராமநாதபுரம்
11.வீரவேங்கை கிரிதரன்-கல்மடுநகர்
12.வீரவேங்கை விஜயகுமார்-சாந்தபுரம்
13.வீரவேங்கை செல்வகுமார்-கோவிந்தங்கடைச்சந்தி
14.வீரவேங்கை முரளிதரன்-வின்சன்வீதி,திருவையாறு
15.வீரவேங்கை பாலசுப்பிரமணியம்-03ஆம் வாய்க்கால்,பன்னங்கண்டி
16.வீரவேங்கை பாலன் மாயவனூர்,வட்டக்கச்சி
17.வீரவேங்கை உதயகுமார்-வின்சன்வீதி திருவையாறு
18.வீரவேங்கை கருணாகரன்/கரன்-முள்ளியவளை

மேலும் வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவடைந்த கீழ்க் குறிப்பிடும் மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

01.வீரவேங்கை சிவாகரன்/சிவா-வட்டக்கச்சி
02.2ஆம் லெப்.சுரேஸ்/கோமதன்-மாயவனூர் வட்டக்கச்சி
03.வீரவேங்கை செல்வேந்திரன்-கல்மடுநகர்
04.கப்டன் தினேஷ்-இராமநாதபுரம்
05.வீரவேங்கை பாபு-முறிகண்டி
06.வீரவேங்கை சுதாகரன்-முறிகண்டி
07.வீரவேங்கை ஜெயம்/துங்கராசா-கல்மடுநகர்
08.கப்டன் மணிவண்ணன் -வட்டக்கச்சி
09.கப்டன் வர்ணகுலசிங்கம்-மட்டக்களப்பு
10.வீரவேங்கை வினோ-இராமநாதபுரம்

வீரசுதந்திரம் வேண்டிநின்றே~இந்தப்
பாரரெங்கும் வியந்திட விதையானீர
இல்லறவாழ்வின் சுகம் துறந்து
எல்லையின் காவலில் பங்கெடுத்தீர
தியாகப்பகைதனைச் சுட்டெரித்து
தியாகம் இதுவெனச்சொல்லிவிட்டீர்!
விழியெல்லாம் கடலென நீர் பெருக
ஒளிச்சுடர் ஏந்தியேபணிந்து நின்றோம்
கல்லறைக்குள்ளே நீள்துயிலோ
காவியவீரரே அமைதி கொள்வீர
வானிலே ஏற்றிடும் புலிக்கொடியில்~உங்கள்
தியாக உயிர்மணம் மணக்குதெல்லோ!

என்றும் உங்கள் நினைவுடன்
நண்பர்கள்,போராளிகள்,
கலைவாணன்/பரந்தாமன்,
குட்டி,சுதா,ரவி,ராஜா,
தர்மராசா.

(6440)

"சுனாமி" ஒருவருட நிறைவு தினத்தை முன்னிட்டு

# ஊழியர் நலன்புரிச் சங்கம்

## கிராமியவைத்தியசாலை-மருதங்கேணி

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், தொண்டர்களின் கொடுப்பனவிற்கும்,நோயாளர்களின் நலனிற்கும், ஊழியர் நலன் புரிச் சங்க தேவைக்குமான நிதி சேகரிப்பு நிகழ்வு

வடமராட்சி K.S பாஸ்கரன் குழுவினரின் இசை நடன நிகழ்வு-2005

இடம்:- வடமராட்சிக்கிழக்கு,பொது விளையாட்டு மைதானம்
காலம்:-25.12.2005
நேரம்:-மாலை 5.00 மணி

அனைவரையும் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
கிராமிய வைத்தியசாலை,
மருதங்கேணி

அன்பளிப்பு 250,500,1000/=

(சி.13582)

# கேள்வி கேட்பதற்கு இலஞ்சம் வாங்கிய விவகாரம்;

# விசாரணைக்குழுவுக்கு மூன்று பா.உ.க்கள் விளக்கம்

(புதுடில்லி)

**கேள்வி கேட்பதற்கு இலஞ்சம் வாங்கிய விவகாரத்தில் சிக்கிய பா.உ.க்களில் மூன்று பேர், பாராளுமன்ற விசாரணைக்குழு முன்பு நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தனர்.**

பாராளுமன்றத்தில் கேள்விகளைக் கேட்பதற்கு பா.உறுப்பினர்கள் இலஞ்சம் வாங்குவதை "ஆஜ்தக்" என்ற தொலைக்காட்சி நிறுவனம் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது. இந்திய அரசியலில் சூறாவளியைக் கிளப்பி நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த விவகாரத்தில் 11 பா.உறுப்பினர்கள் சிக்கினார்கள்.

அவர்களில் பத்துப்பேர் மக்களவைக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஒருவர் டில்லி மேல்-சபை பா.உ.ஆவார். அவர்கள் அனைவரும் பாராளுமன்றத்துக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் பற்றி விசாரணை நடத்துவதற்காக பவன்குமார் பன்சால் பா.உ.தலைமையில் ஐந்துபேர் கொண்ட பாராளுமன்ற விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

# மந்திரிசபை விரைவில் மாற்றம்;

# மன்மோகன்சிங்-சோனியா ஆலோசனை





(புதுடில்லி)

இந்திய மந்திரி சபையில் விரைவில் மாற்றம் செய்வது குறித்து இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்கும் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியும் ஆராய் ந்து வருகின்றனர்.

முக்கிய பொறுப்புக்களில் இருந்த மந்திரிகள் பலர் அதில் இருந்து விலகியுள்ளனர். சிலர் மரணமடைந்துள்ளனர். இதனால் தற்போது ஏழு இடங்கள் வெற்றிடமாக உள்ளன. எனவே மந்திரி சபையை உடனடியாக மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே சிபுசோரன், ஜெகதீஷ் டைட்லர்,நட்வர்சிங்,குலாம் நபி ஆசாத், ஜெய்ப்பிரகாஷ் நாராயணயாதவ் ஆகியோர் பதவி விலகியதாலும், சுனில்தத் மரணம் அடைந்ததாலும் அந்த இடங்கள் வெற்றிடமாகியுள்ளன. எனவே மந்திரிசபையில் மாற்றம் செய்வது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது.

## சொத்துக்கணக்கை காட்ட முலாயம்சிங் தயாரா?

## சவால்விடுகிறது காங்கிரஸ் கட்சி

(லக்னோ)

சொத்துக்கணக்கைக் காட்ட முலாயம்சிங் தயாரா என்று காங்கிரஸ் கட்சி சவால் விடுத்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநில காங்கிரஸ் தலைவர் சல்மான் குர்ஷித், லக்னோவில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் வாதிகளின் சொத்துக் கணக்கைத் தெரிந்து கொள்ள பொது மக்களுக்கு உரிமை உள்ளது.உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள், தாங்களாகவே முன்வந்து சொத்துக் கணக்கைக் காட்டுவார்கள்.

அதுபோல் உத்தரப்பிரதேச மாநில முதல் மந்திரி முலாயம்சிங் சொத்துக் கணக்கை காட்டத் தயாரா? தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்த போது அவர் சொத்துக் கணக்கைக் காட்டியுள்ளார். இப்போது புதிதாக சொத்துக் கணக்கு காட்டுவதில் என்ன தவறு? அவரது சொத்துக் கணக்கு குறித்து கேள்வி எழுப்பப்படும்போது அவர் தூய்மையானவராக தன்னை நிரூபிக்க வேண் டும். அதைவிட்டுவிட்டு, அவர் இந்தப் பிரச்சினையைத் தவிர்ப்பது ஏன் என்று புரியவில்லை. எனத் தெரிவித்தார்.

## இட்லி சாப்பிட்டவருக்கு இதயம் நின்றது

சாப்பிடும் போட்டியில் பங்கேற்று அவசர அவசரமாக இட்லிகளை விழுங்கியவர் இட்லி தொண்டையில் அடைத்துப் பலியானார்.

திருவனந்தபுரம் அருகே உள்ளது கன்னாந்துறை. புனித பீட்டர் தேவாலயத்தில் இளைஞர் மன்றம் சார்பில் கிறிஸ்மஸ் விழா கோலா கலமாகக் கொண்டாடப்பட்டது. அப்போது நடத்தப்பட்ட இட்லி சாப்பிடும் போட்டியில் 12 பேர் கலந்து கொண்டனர். அதில் அந்தோணி இம்மானு வேல் (வயது-63) என்ற முதியவர் ஆவலில் குவித்து வைக்கப்பட்டிருந்த இட்லிகளை விரைவாகச் சாப்பிட்டார். ஆனால் இட்லிகளில் ஒன்று அவரது தொண்டையில் சிக்கியது. மயக்கமடைந்த அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர். ஆனால் செல்லும் வழியிலேயே அவர் மரணமானார்.

## பாராளுமன்றத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

## டில்லி பொலிசார் 4 பேர் தமிழகம் வருகை

(புதுடில்லி)

பாராளுமன்றத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த விவகாரம் தொடர் பாக தீவிர விசாரணை நடத்த டில்லியில் இருந்து சிறப்பு புலனாய்வு பொலிசார் நான்கு பேர்தமிழகத்துக்கு சென்றுள்ளனர்.

டில்லி பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட வெடிகுண்டு மிரட்டல் நெல்லையை அடுத்த பாளையங்கோட்டையில் உள்ள இண்டர்நெட் மையத்தில் இருந்து அனுப்பப்பட்டிருப்பதை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து இரண்டு இண்டர்நெட் மையங்களில் பொலிசார் அதிரடி சோதனை மேற்கொண்டனர். அந்த இண்டர்நெட் மையங்களுக்கு அன்றையதினம் வந்து தகவல் அனுப்பியவர்களின் பட்டியலை ஆய்வு செய்த பொலிசார் அவர்களில் சிலரைப் பிடித்துச் சென்று விசாரணை நடத்திவருகிறார்கள்.



காஷ்மீரில் பொலிசாரின் அராஜகப் போக்கைக் கண்டித்து ஆர்ப்பாட்டக் காரர்கள் போராட்டத்தில் குதித்தனர். போராட்டத்தில் குதித்தவர்கள் பொலிசாருக்கு எதிராகக் கல்வீச்சில் ஈடுபட போராட்டம் கலவரமாக மாறியது.

## பேருந்து ஆற்றில் பாய்ந்தது; 22 பேர் பலி;24பேர் காயம்

(காஷ்மீர்)

காஷ்மீரின் முஷாபராபாத் அருகே பயணிகள் பேருந்து ஒன்று ஆற்றில் விழுந்ததில் அதில் பயணம் செய்த 22பேர் உயிரிழந்துள்ளார்கள், 24 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

முஷாபராபாத் அருகிலுள்ள சேனா என்ற இடத்தில் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பேருந்து பாதையை விட்டுவிலகி ஆற்றில் விழுந்துள்ளது. 22 பேர் ஆற்றில் மூழ்கி பரிதாபகரமாக இறந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக் கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஈரான்-இந்தியா எரிவாயுக்குழாய்; பாதைத்திட்டம் அடுத்த ஆண்டு ஆரம்பம்

ஈரான் நாட்டில் இருந்து பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு எரிவாயு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக 2,100 கிலோமீற்றர் தூரத்துக்கு குழாய் இணைக்கப்பட்டுள்ளது. குழாய் போடும் பணியை 2007ஆம் ஆண்டு யுன் மாதத்துக்குள் தொடங்க இந்தியாவும், பாகிஸ்தானும் நேற்று முன்தினம் ஒப்புக்கொண்டன. இந்தக் குழாய் வழியாக 2010 ஆம ஆண்டு இறுதியில் இருந்து இந்தியாவுக்கு எரிவாயு வர ஆரம்பிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.


## 5 ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 08 . 07 . 1982

தாயக மண்ணில் 22 . 12 . 2000



**லெப்.கதிரழகன்**

புஸ்பராஜா விமலடாஸ்

(இம்ரான் பாண்டியன் படையணி)

ஆண்டு ஐந்து சென்றதையா
ஆறவில்லை எம்துயர்
மீண்டும் ஒரு முறை
எம்முன்னே வாராயோ
கண்மணியே

இவருடன் வீரகாவியமான அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்

உனது பிரிவால் துயருறும் பெற்றோர், உற்றார், உறவினர்
தடு மின்வாரிய வீதி,
மல்லாவி.

சொ.மு
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை



World Vision

**World Vision Lanka (L T R T)**

**Mullaitivu**

**வியாபார முயற்சியாண்மை விருத்தி பயிற்சி நெறி**

மேற்படி வியாபார முயற்சியாண்மை விருத்தி பயிற்சி நெறியானது சுனாமியால் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டது

**3 நாட்கள் வதிவிடப் பயிற்சி நெறி முற்றிலும் இலவசமாக நடைபெற உள்ளது.**

பின்வரும் அடிப்படையில் இப் பயிற்சி நெறி நடைபெற உள்ளது.

1. வியாபார எண்ணக்கருவை தோற்றுவித்தல் (Generate Business Idea)
2. புதிதாக வியாபாரத்தை ஆரம்பித்தல் (Start Business)
3. வியாபாரத்தை விருத்தி செய்தல் (Improve Business)
4. புதிதாக வியாபாரத்தை ஆரம்பித்தல் (மீன் பிடி சம்பந்தமானது)
5. மீன் வியாபாரத்தை விருத்தி செய்தல்

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன் சாதாரணதரம் படித்தவரா கவும் இருத்தல் வேண்டும்.

உங்கள் சுயவிபரக்கோவையை கீழ்காணும் விலாசத்திற்கு 31.12. 2005 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கவும்

*திட்ட இணைப்பாளர்,*
*ஜீவனோபாயதிட்டம்,*
*வேள்ட் விஷன்,*
*நேடுங்கேணி ரோட், ஒளிஎவளை.*

(7165)

# பாகிஸ்தான் தொடரில் கங்குலிக்கு வாய்ப்பு; இந்தியாவின் முகாமையாளராக துங்கர்பூர்?



இந்திய கிரிக்கெட் அணி சிறிலங்காவுடனான போட்டி முடிந்ததும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்கிறது. முதல் டெஸ்ட் போட்டி லாகூரில் 14 ஆம் திகதி தொடங்குகிறது. இதற்கான வீரர்கள் வரும் 24 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளனர்.

இந்திய அணியின் ஒருநாள் போட்டியில் இருந்து நீக்கப்பட்டிருந்த முன்னாள் தலைவர் கங்குலி சிறிலங்காவுக்கு எதிரான டெஸ்ட் அணியில் இடம்பெறறிருந்தார். சென்னை, டில்லியில் நடந்த இரு போட்டியிலும் ஆடிய அவர் அகமதாபாத் போட்டியில் நீக்கப்பட்டார்.

இது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அவருடைய சொந்த மாநிலமான மேற்கு வங்காளம் மட்டும் அல்லாமல் நாடு முழுவதுமே கங்குலிக்கு ஆதரவாக குரல்கள் ஒலித்தன. அரசியல் தலைவர்களும் கங்குலிக்கு அதரவுக்குரல் கொடுத்தார்கள்.

அவரை நீக்கியதற்கு கிரிக்கெட்சபை புதிய தலைவர் சரத்பவார்தான் காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இதன் அடிப்படையில் சரத்பவாரும், கங்குலியும் நேற்று முன்தினம் டில்லியில் சந்தித்துப் பேசியுள்ளனர். 24 ஆம் திகதி இந்திய வீரர்கள் பட்டியல் அறிவிக்கப்படும் போது அதில் கங்குலி இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் கங்குலி மீண்டும் வருவதைத் தலைவர் ராவிட் மூத்த வீரர்கள் டெண்டுல்கர் ஷேவாக், கும்ளே மற்றும் சிலர் விரும்பவில்லை என்று தெரிகிறது. இதற்காக எல்லா வீரர்களையும் ஒருங்கிணைத்துச் செல்லும் பக்குவம் கொண்ட முன்னாள் கிரிக்கெட் சபைத்தலைவர் ராஜ்சிங் துங்கர்பூரை அணி முகாமையாளராக நியமிக்கத்திட்டமிட்டுள்ளனர். துங்கர்பூர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத்தலைவர் சகாரியர்கானின் நெருங்கிய நண்பர் ஆவார். இதுவும் அவரை முகாமையாளராக நியமிக்க சாதகமாக அமைந்துள்ளது.



உலக உதைபந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த வீராங்கனையாகத் தொடர்ந்து மூன்றாவது முறையாக ஜேர்மனியின் பிர்ஜித் பிரின்ஸ் தெரிவானார். இதில் சிறந்த வீரராக பிரேசிலின் ரொனால்டினோ தெரிவானமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை, இவ்வாண்டின் சிறந்த கால்பந்து அணிக்கான விருதை பிரேசில் நான்காவது முறையாகத் தட்டிச் சென்றது.

# அகமதாபாத் டெஸ்டில் இந்தியா வெற்றிபெற இன்னும் நான்கு விக்கெட்டுக்கள் வீழ்த்தவேண்டும்




அகமதாபாத் டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றிபெற சிறிலங்காவின் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டியுள்ளது.

287 ஓட்டங்களுக்கு ஒன்பது விக்கெட்டுக்கள் என்ற நிலையில் நேற்றுக்காலை தொடர்ந்து ஆடிய இந்தியா 316 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

ஹர்பஜன்சிங் 40 ஓட்டங்களுடனும், கும்ளே 29 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இதன் மூலம் சிறிலங்காவின் முதல் இனிங்ஸ் ஓட்டத்தைவிட 192 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற இந்தியா 509 எனும் வெற்றியிலக்கை சிறிலங்காவுக்கு நிர்ணயித்தது.

தலைவர் அத்துப்பத்துவும், தரங்கவும் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ஓட்டங்கள் 39 ஆக உயர்ந்தபோது சிறிலங்காவின் முதல் விக்கெட் வீழ்ந்தது. அத்துப்பத்து 16 ஓட்டங்களுடன் ஹர்பஜன்சிங் பந்தில் ஆட்டமிழந்தார். மதிய உணவு இடை வேளையின்போது சிறிலங்கா அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 39 ஓட்டங்கள் எடுத்திருந்தது.



மதிய உணவு இடைவேளைக்குப் பின் தரங்கவுடன் ஜோடி சேர்ந்த சங்கக்கார 17 ஓட்டங்களுடன் கும்ளே பந்தில் ஆட்டமிழந்தார். அப்போது சிறிலங்காவின் ஓட்டங்கள் 84 ஆக இருந்தது.

பின்னர் வந்த சமரவீர ஐந்து ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, தரங்கவும் 47 ஓட்டங்களுடன் கும்ளேயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

பின்னர் ஜோடி சேர்ந்த ஜெயவர்த்தன, டில்சான் விக்கெட் சரிவைத் தடுத்து நிறுத்தி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இவர்களின் இணைப்பாட்டத்தை அகக்கர் பிரித்தார். அப்போது ஜெயவர்த்தன 57 ஓட்டங்களைப் பெற்று வெளியேறினார். பின்னர் டில்சான் பதானின் பந்துவீச்சில் 65 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இதனால், சிறிலங்கா அணி நேற்றைய ஆட்டநேர நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றுள்ளன.

ஆட்டமிழக்காது முபாரக் 18 ஓட்டங்களுடனும், மஹ்ரூப் எட்டு ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் கும்ளே மூன்று விக்கெட்டுக்களையும், பதான், ஹர்பஜன்சிங், அகக்கர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற நிலையில் முன்னணி வகிக்கும் இந்தியா இதில் வெற்றி பெற்றால் டெஸ்ட் தரவரிசையில் இங்கிலாந்து அணியை பின்னுக்குத் தள்ளி இரண்டாவது இடத்தைக் கைப்பற்றும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்டுமான பணி முடிவு பெறாத வெம்பிளி மைதானம்



வரும் மே மாதம் 13ம் திகதி நடைபெறவுள்ள உதைபந்தாட்ட சம்மேளனக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட வெம்பிளி மைதானத்தின் கட்டுமானப்பணி முடிவு பெறாது என மல்ரிப்னக்ஸ் என்பவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை 75 மில்லியன் பவுண் செலவழிக்கப்பட்டுள்ளபோதும் பூர்த்தியாவதற்கான மூலப்பொருட்கள் தட்டுப்பாடுகாரணத்தால் 2006 மே 13 ஆம் திகதிக்குள் பணியை முடிக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

பணியை பொறுப்பேற்ற நிறுவனம் முதலில் சனவரி 31ஆம் திகதிக்குள் முடித்துத் தருவதாக ஒப்பந்தம் செய்தது. பின்னர் மார்ச் 31ஆம் திகதிக்குள் முடித்துத் தருவதாகக் கூறியது. எனினும் குறிப்பிட்ட உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டி நடைபெறும் மே 13ஆம் திகதிக்குள் பணியை முடித்துத் தருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினால் பூநகரி பிரதேச கழகங்களுக்கான சீருடை வழங்கல்





இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினால் பூநகரி பிரதேச விளையாட்டுக்கழகங்களுக்கான சீருடைகளின் ஒருதொகுதி வழங்கப்பட்டன. இந்நிகழ்வு பூநகரி பிரதேச உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பரஞ்சோதி தலைமையில் நிகழ்வு ஆரம்பமாகின. தொடர்ந்து பூநகரி உதவி அரசாங்க அதிபரும், பூநகரி பிரதேச விளையாட்டுத்துறை இணைப்பாளர் மூர்த்தியும், வடக்கு கிழக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனப்பணிப்பாளர் விஜியும், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ரதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் பூநகரி உதவி அரசாங்க அதிபர், வடக்கு கிழக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனப்பணிப்பாளர் விஜி, தமிழீழ விளையாட்டுத்துறை ஊடக இணைப்பாளர் தேவன், இளையோர் செயற்பாட்டு நிறுவன நிதிப் பொறுப்பாளர் கமல், கிராமசேவகர்கள் ஆகியோர் விளையாட்டு வீரர்களுக்கான சீருடைகளை வழங்கினர். இந்நிகழ்வில் பன்னிரண்டு விளையாட்டுக் கழக வீரர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றது.




# பரபரப்பான இறுதி ஒரு நாள்போட்டி இங்கிலாந்துக்கு ஆறுதல் வெற்றி

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் ராவல்பிண்டியில் நேற்று நடைபெற்ற ஐந்தாவதும், இறுதியுமான ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி ஆறு ஓட்டங்களால் பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்தது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சோலங்கி 49, பிளின்டொப் 39, கொலிங்வூட் 33, பிரெஸ்கெற் 24 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஹசன், அசிப் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், ராசக், கான், அப்ரிடி தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.





பதிலுக்கு 207 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுத் தோல்வியைத் தழுவியது. துடுப்பாட்டத்தில் ஹமீட் 57, முகமட் யுசுப் 54 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அன்டர்சன் நான்கு, பிளெக்வெல் மூன்று ஹார்மிசன், உடல் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். இப்போட்டியில் அணித் தலைவர் இன்சமாம், வேகப் பந்து வீச்சாளர் அக்தர் ஆகியோர் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரை பாகிஸ்தான் ஏற்கனவே கைப்பற்றிய நிலையில் இங்கிலாந்தின் இவ்வெற்றி மூலம் தொடர் 3-2 என்ற நிலையில் நிறைவடைந்தது.



சிந்தனைக்கு

இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சிகொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 22.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# இராணுவத்தர்பார்!

யாழ்.குடாநாட்டில் தமிழ்மக்கள் மீதான இராணுவத்தினரின் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் மீதும், பொதுமக்கள் மீதும் மூன்று தினங்கள் தொடர்ச்சியாக இத்தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

இந்தவகையில் நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக வளாகத்திற்குள் அத்துமீறி பிரவேசித்த சிறிலங்கா இராணுவத்தினரும் சிறிலங்காப் பொலிசாரும் மாணவர்கள் மீதும் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டதோடு விரிவுரையாளர் ஒருவரையும், மாணவர் இருவரையும் அடித்து இழுத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை யாழ். நகரப்பகுதியில் முச்சக்கரவண்டிச்சாரதிகள் நடத்திய பேரணியின் மீதும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை இராணுவம் கட்டவிழ்த்து விட்டதோடு, சாரதிகள் பலரையும் படுகாயத்திற்குள்ளாக்கியது. அத்தோடு அவர்களின் முச்சக்கர வண்டிகளையும் அடித்து நொருக்கியுள்ளது.

இதேபோன்று யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் மீதான தாக்குதலைக் கண்டித்து வீதிமறியல் போராட்டம் நடாத்திய யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இரண்டு மாணவர்கள் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வகையில் சிறிலங்கா இராணுவத்தினர் யாழ்.குடாநாட்டில் படிப்படியாக தமது அடாவடிச் செயலை அதிகரித்த வண்ணமுள்ளனர். அதாவது சிறிலங்கா இராணுவத்தினர் காட்டுத்தர்பார் ஒன்றை யாழ்.குடாநாட்டில் நடத்த தொடங்கியுள்ளனர் எனக் கூறின் தவறாக மாட்டாது.

அதாவது இன்று யாழ்.குடாநாட்டில் முற்றிலுமாக இராணுவத்தர்பார் ஒன்று நடைபெறுகின்றது என்பதே உண்மை. அவ்வாறு இல்லாது விட்டால் அதாவது சிவில் நிர்வாகம் ஒன்று நடைபெறுவதாக இருந்தால் இத்தகையதொரு நெருக்கடி நிலை தோன்றுவதற்கு வாய்ப்பு இல்லை.

யாழ்.குடாநாட்டில் சிவில் நிர்வாகம் நடைபெறுவதாக இருந்தால் அங்கு அனைத்துச் செயற்பாடுகளையும் இராணுவம் மேற்கொள்ள முடியாது. எடுத்துக்காட்டாக யாழ்.பல்கலைக்கழக சமூகம் அமைதிப் பேரணியைத்தடுத்து நிறுத்துவதாயின் பொலிசாரே பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அதிலும் அமைதிப் பேரணி எனின் பாதுகாப்பு அளிப்பது பொலிசாரின் செயலாக இருப்பதுண்டு. அதற்கு மாறாக இராணுவத்தினரைப் பயன்படுத்துவதும், அமைதிப் பேரணி மீது தாக்குதல் நடத்தப்படுவதும் இராணுவ ஆட்சி நிலவும் நாடுகளிலேயே நடைபெறுவதுண்டு.


இது ஒருபுறமிருக்க மக்கள் மீதும், மாணவர்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொள்ளும் இராணுவத்தினர் முகங்களை கறுப்புத்துணிகளால் மூடிக்கட்டியவாறே தாக்குதல்களில் ஈடுபட்டு வருவது ஏன்? மக்கள் அடையாளம் கண்டுகொண்டு விடுவார்கள் என்பதிலா? அவ்வாறு அடையாளம் காட்டாது இருப்பதற்கு முயற்சிப்பது ஏன்? சட்டத்திற்கு அஞ்சியா? தமிழ்மக்களுக்கு அஞ்சியா?

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரின் அடாவடித்தனத்தை எதிர்த்துப் போராடப்போவதாகவும், தாக்குதல் நடத்தப் போவதாகவும் எச்சரிக்கும் பொங்கி எழும் மக்கள்படை போன்றவை தமது முகங்களை வெளிக்காட்டிக்கொள்ளத் தயாரானபோது இராணுவத்தினர் முகங்களை காட்டாமைக்கு அவர்களுக்குத் தமிழ் மக்கள் மீதான அச்சமே காரணமாகும்.

இதேவேளை சிறிலங்கா இராணுவம் கட்டவிழ்த்து விட்டுள்ள மக்கள் மீதான மிலேச்சத்தனமான தாக்குதல் குறித்து சர்வதேச சமூகமும், மனித உரிமைகள் அமைப்புக்களும் கண்டுகொள்ளாமல் இருப்பதும் ஆச்சரியத்திற்குரியதொன்றாகும்.

சர்வதேச அரசுகளும்,அமைப்புகளும் அரசுகளின் சார்பு நிலை கொண்டவையாகச் செயற்படுவது என்பது வெளிப்படையான தொன்றுதான். எனினும் அரசின் மிலேச்சத்தனம் கட்டுமீறிச் செல்லும் நிலையிலும், கண்களை மூடிக்கொண்டிருப்பதாவது அவ்வமைப்புக்களும், அரசுகளும் மனித உரிமைகள் தொடர்பாக கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து கேள்வியெழுப்புகின்றது.

ஆனால் யார் கண்டித்தாலும், கண்டிக்காது விட்டாலும் சிறிலங்கா அரசும் ஆயுதப்படையும் தமிழ்மக்களின் மீதான ஒடுக்குமுறையைக் கைவிடப்போவதில்லை. இதேசமயம் இவ் ஒடுக்குமுறையை தமிழ்மக்களும் நீண்டநாட்கள் பொறுத்துக்கொண்டிருக்கப்போவதில்லை. ஆனால் தமிழ்மக்கள் கிளர்ந்தெழும்போது இச்சர்வதேசநாடுகளும், அமைப்புக்களும் இன்று போல் இருந்தால் போதும். அதற்கு மாறாக ஒடுக்குமுறையாளர்களுக்கு ஆதரவு அளிப்பதும், அவர்களின் பிரச்சாரத்திற்கு ஒத்துவரும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு இடையூறு விளைவிக்க முனைவதும் விரும்பத்தக்கதல்ல. அது மனித உரிமைகள் தொடர்பாக அவை இருவேறு அளவுகோல்களைக் கொண்டிருப்பதாக எண்ண வைத்துவிடும்.



கல்விச் சமூகம் மீது படையினரின் கொடூரம்...

# ஆசிய நாடொன்றில்தான் பேச்சுக்கள்; ஜே.வி.பி யிடம் மகிந்த உறுதிபடத் தெரிவிப்பு

## - ஜே.வி.பி யின் நிலைப்பாட்டை ஏற்றார்

(கொழும்பு)

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் பேச்சுக்களை ஆசிய நாட்டில்தான் நடத்த வேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாக தம்மைச் சந்தித்த ஜே.வி.பி குழுவினரிடம் சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் ஜே.வி.பி குழுவினர் நேற்று முன்தினம் மகிந்தவை சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்பின்போது, ஒஸ்லோவில்தான் பேச்சுகள் நடத்த வேண்டும் என்று விடுதலைப்புலிகள் வலியுறுத்திவருகின்ற நிலையிலும் ஏதேனும் ஒரு ஆசிய நாட்டிலேயே பேச்சுகளை நடத்த வேண்டும் என்பதில் தாம் உறுதியாக உள்ளதாகக் கூறினார்.

ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற முன்னைய பேச்சுகளில் தீர்வுகள் ஏதும் ஒப்புக்கொள்ளக் கூடிய வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்றும், அங்கு பேச்சுகள் நடைபெறுவது விடுதலைப்புலிகளுக்குத் தான் சாதகமாக அமையும் என்றும் அனைத்து நிலைமைகளையும் அவதானித்துப் பார்க்கும்போது ஆசிய நாட்டில் பேச்சு நடத்துவதுதான் சரியானது என்று கருதுவதாக ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி யின் இந்த நிலைப்பாட்டை மகிந்தராஜபக்ஷ ஏற்றுக் கொண்டதாக ஜே.வி.பி யின் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாகவும் ஜே.வி.பி யினருக்கு மகிந்தராஜபக்ஷ விளக்கம் அளித்துள்ளார். இந்தச் சந்திப்பின்போது மகிந்தவுடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உடனிருந்தார்.

ஹொங்கொங்கில் நோர்வே வெளிவிவகார அமைச்சருடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விபரங்களை ஜே.வி.பி யினருக்கு மங்கள சமரவீர விளக்கினார்.

ஜே.வி.பி யின் குழுவில் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

# யாழ்.நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை தர மகிந்த பணிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் இடம்பெற்ற பதற்ற நிலை தொடர்பாக ஆராய்ந்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறிலங்கா சனாதிபதி மகிந்தராஜபக்ஷ படையதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் பிரதேசத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அமைதியை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

சனாதிபதியின் இந்த உத்தரவு பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகச் சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்முறைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# சிறு தென்னந்தோட்ட உரிமையாளர் விசனம்

(கொழும்பு)

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள 350 ரூபாவிற்கான உரமானியம் தங்களுக்கும் பெற்றுத்தருமாறு சிறு தென்னந்தோட்ட உரிமையாளர்கள் சிறிலங்கா அரசாங்கத்தை கேட்டுள்ளனர்.

சனாதிபதித் தேர்தலின்போது சனாதிபதி மகிந்தராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்பட்டவர்களுக்கு மாத்திரம் 350 ரூபாவுக்கு பசளை விநியோகம் செய்கின்றனர் என சிறு தென்னந்தோட்ட உரிமையாளர்கள் கூறியுள்ளனர்.

# 350 ரூபாவிற்கு உரத்தை வழங்க ஜே.வி.பி அரசுக்கு உதவ வேண்டும்

## - ஐ.தே.க வின் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள சகல விவசாயிகளும் 350 ரூபாவிற்கு உரம் பெறுவதில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளபடியால், இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ஜே.வி.பி யினர் அரசுடன் இணைந்து பொதுமக்களுக்கு உரம் விநியோகம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பந்துலகுணவர்த்தன கேட்டுக கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் இக்கருத்தினை அவர் தெரிவித்துள்ளார். நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு 350 ரூபாவிற்கு உரம் விநியோகம் செய்யும் முழுப்பொறுப்புக்களையும் ஜே.வி.பி ஏற்றுக்கொள்ள வேண்டும் என பந்துலகுணவர்த்தன தெரிவித்துள்ளார். தேர்தலின்பொழுது ஜே.வி.பி யினர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் யாவும் தற்பொழுது காற்றில் பறக்கிறதென அவர் தெரிவித்துள்ளார்.

# போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குக!

## யாழ். மாவட்ட அரசியல்துறை மக்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பணிகளுக்கு ஊறு விளைவிக்காது முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ். மாவட்ட அரசியல்துறை பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது

இது தொடர்பாக வெளியிட்டுள்ள யாழ்ப்பாணத்தில் இயங்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு போர்நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படுவதைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் ஐரோப்பிய நாடுகளான நோர்வே, சுவீடன், பின்லாந்து, டென்மார்க், ஐஸ்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

நோர்வே, சிறிலங்கா அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அனுசரணையாளராகவுள்ளது.

ஏற்கனவே சிறிலங்கா அரசாங்கம் போர்நிறுத்த உடன்படிக்கையை உடனடியாக முழுமையாக நிறைவேற்றவில்லை. அண்மைக்காலமாக போர்நிறுத்த உடன்படிக்கையை முற்றாகச் செயலிழக்க வைப்பதற்காக பெண்கள் மீதான கொடுரமான பாலியல் வன்முறைகள், சுற்றி வளைப்புக்கள், தேடுதல்கள், அறிவாளர்கள் தமிழ்தேசபற்றாளர்கள் மீதான படுகொலைகள், பொதுமக்கள் மீதான துப்பாக்கிச் சூடுகள், தடியடி, மாணவர்களாலும் அறிவுஜீவிகளாலும் முன்னெடுக்கப்பட்ட ஊர்வலங்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்கள் ஆகியவற்றில் சிறிலங்கா ஆயுதப்படைகளும், ஒட்டுக் குழுக்களும் ஈடுபட்டுவருகின்றனர்.

சிறிலங்காப் படையினரதும் , பொலிசாரினதும், ஒட்டுக்குழுக்களினதும் கட்டுமீறிய இச்செயற்பாடுகள் போர்நிறுத்த உடன்படிக்கையை மிகநெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளன. அத்துடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகளுக்கு நேரடியான இடையூறுகளை விளைவிக்கின்றன.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகள் சிறிலங்காப் படையினரின் அராஜகத்தையும், மக்கள் மீதான பயங்கரவாத வன்முறைகளையும் வெளிக்கொண்டு வருவதுடன் தமிழர் தரப்பின் நியாயப்பாடுகளையும் அனைத்துலக அரங்கில் தெளிவுபடுத்துகின்றன.

எனவே இதற்கான வாய்ப்பினை அதிகரிக்கும் வகையில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் சுதந்திரமான பணிகளுக்கு எவ்வகையான அழுத்தங்களையும், நெருக்கடிகளையும், இடையூறுகளையும் விளைவிக்காது இலங்கைபோர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் அவர்களது கண்காணிப்பாளர்களுக்கும் தமிழ்மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

### யாழ். கல்வி..

உயர்கல்வி நிறுவனங்களின் அமையம் போர்நிறுத்தக்கண்காணிப்பு குழுவிடம் கோரிக்கை மனுவை கையளிக்கப்போவதாக வெளியான தகவலை அடுத்து படையினர் நல்லூர் வீதி மற்றும் கச்சேரி வீதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.(32,27)

### புங்குடுதீவில்..

புங்குடுதீவைச்சேர்ந்த பத்மநாதன், ஜீவகுமார், கணேஸ், பவா, சிறீஸ்காந்தன், ராசா, ஜெயந்தன், குமார், பிரபாகரன், கோடீஸ்வரன், சிறிஸ்காந்தராசா, சிறிகாந்தன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பின்னர் கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

### கூட்டங்கள் பிற்போடல்

நேற்று முன்தினம் நடைபெற இருந்த அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டமும் இன்று நடைபெறவிருந்த மாவட்ட விவசாயக் குழுக்கூட்டமும் முறையே நாளை காலை பத்து மணிக்கும், காலை 11.30 மணிக்கு நடைபெறுமென கிளி. மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

### படையினர்...

துறை நடுவப் பணியகம் முன்பாக ஆரம்பமான கண்டன ஊர்வலம் கிளிநொச்சியிலுள்ள இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு செயலகம் வரை சென்றடைந்தது. மேற்படி படுகொலையைக் கண்டித்து மனு ஒன்றும் கண்காணிப்புக் குழுவினரிடம் கையளிக்கப்பட்டது. கண்டன மனுவை பெண்கள் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திருமதி.புனிதம் செல்வரட்ணம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதி சொனிக் ஜோன்சனிடம் கையளித்தார்.

### சிறிலங்கா...

பழங்காலத்தில் இருந்தே ஈழத்தில் தமிழர்கள் தனி இனமாக வாழ்ந்ததற்கு சான்றுள்ளது. சிங்களமொழி முதன்மைப்படுத்தப்பட்ட போதுதான் தனி ஈழப்பிரச்சினை எழுந்தது. தனி ஈழம் அமைப்பதுதான் இலங்கைப் பிரச்சினைக்கு ஒரே தீர்வாக இருக்க முடியும்.

இந்தியா- சிறிலங்கா இராணுவ ஒப்பந்தம் அண்மையில் கையெழுத்தாக இருந்தபோது அதற்கெதிராக, தலைமை அமைச்சர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரிடம் பேசினேன். அதையடுத்து ஒப்பந்தம் கை விடப்பட்டது.

தற்போது சிறிலங்காவின் கட்டுப்பாட்டில் இருக்கும் பலாலி வானூர்தி நிலையத்தின் ஓடுதளத்தை இந்திய உதவியுடன் சீரமைத்து வருவதாகச் சிறிலங்கா வான்படைத் தளபதி கூறியுள்ளார். இந்திய அதிகாரிகள் விரைவில் பார்வையிட வரவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

பலாலி வானூர்தித்தளத்தைப் பயன்படுத்தி தமிழர்களை சிறிலங்கா இராணுவம் கொன்றது. எனவே இந்த வானூர்தித் தளம் சீரமைக்கப்பட்டால் தமிழர்களிற்கு ஆபத்து ஏற்படும். தமிழ் நாட்டு தமிழர்களின் வரிப்பணத்தை பயன்படுத்தி ஈழத் தமிழர்கள் அழிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்கனவே இந்தியா உதவி செய்துள்ளது. மீண்டும் இதுபோல இந்திய அந்நாட்டு இராணுவத்திற்கு உதவக் கூடாது. இலங்கையில் போர் மேகம் சூழ்ந்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் வெளியாகின்றன. சிறிலங்காவுக்கு உதவி செய்யும் முடிவு எதனையும் பிரதமர் மன்மோகன் சிங் எடுக்கமாட்டார்.

ஆனால் ஒரு சில இந்திய அதிகாரிகள், சிறிலங்காவுக்கு உதவத் தயாராக இருப்பதாக எனக்கு தகவல் வந்துள்ளதால், இக்கருத்து அவர்களிற்கு எச்சரிக்கையாக இருக்கும். இவ்வாறு வைகோ தெரிவித்துள்ளார்

### போருக்கான..

ஹான்ஸ்பிரஸ்கர் வெளியுறவுத்துறை அமைசசின் அதிகாரி சொண்ட்றே ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில், அரசியல் ஆலோசகருடன் அவரது துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களும் பங்கேற்றார். யாழ் .குடாநாட்டின் தற்போதைய கள நிலவரம் குறித்து நோர்வே உயர்மட்ட தூதுக்குழுவினரிடம் எடுத்து விளக்கிய விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் யாழ். குடாநாட்டில் இடம் பெறும் வன்முறைச்சம்பவங்களுக்கு சிறிலங்கா ஆயுதப்படைகளே காரணம் எனக்குற்றம் சுமத்தினார்.

அமைதி வழியில் சனநாயக ரீதியாக நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்கள் மீது ஈவிரக்கமற்ற முறையில் சிறிலங்காப் படையினர் வன்முறையைக்கட்டவிழ்த்து விட்டதால் மாணவர்களும், விரிவுரையாளர்களும், பொதுமக்களும் படுகாயமுற்றமை குறித்து நோர்வே உயர்மட்டத்தூதுக்குழுவினரிடம் அவர் எடுத்து விளக்கினார்.

போர்நிறுத்த உடன்படிக்கையில் உள்ள முக்கிய விதிகளையும்,கட்டுப்பாடுகளையும், சிறிலங்கா அரசாங்கம் குறிப்பாக சிறிலங்கா ஆயுதப்படைகள் நிறைவு செய்ய மறுத்து வருவதன் காரணமாகவே இவ்வாறான வன்முறைகள் தீவிரமடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மிகவும் கடும் போக்காளரான லெப். ஜெனரல் சரத்பொன்சேகா சிறிலங்காப் படைத்தளபதியாக பொறுப்பேற்றதை அடுத்து, தமிழ் மக்கள் மீதான அடாவடித்தனங்கள், அடக்குமுறைகள் மோசமடைந்திருப்பதாகவும், போருக்கான புறநிலையைத் தோற்றுவிப்பதற்காக சிங்கள அரசும் படைத்துறைத்தலைமைகளும் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்ட அன்ரன்பாலசிங்கம் இதனைக்கருத்திற்கொண்டு சிறிலங்கா அரசாங்கம் மீது அனைத்துலக சமூகம் காத்திரமான அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

சுமார் மூன்று மணி நேரமாக அரசியல் ஆலோசகருடன் ஆலோசனை நடத்திய நோர்வே அமைச்சர் எரிக் சூல்ஹெய்ம் யாழ். குடாநாட்டில் திடீரென தீவிரமடைந்துள்ள வன்முறைச் சம்பவங்கள் குறித்து அனைத்துலக சமூகம் ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாகவும், கால தாமதமின்றி தமிழீழ விடுதலைப்புலிகளும் சிறிலங்கா அரசாங்கமும், போர்நிறுத்த அமுலாக்கம் குறித்துள பேச்சுவார்த்தைகளை நடாத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த வன்முறைகள் முடிவுக்குக் கொண்டுவரப்படாத பட்சத்தில் அவை ஒரு யுத்த நெருக்கடியாக வெடிக்கும் பேரபாயம் ஏற்படலாம் என அனைத்துலக சமூகம் அஞ்சுவதாகவும் நோர்வே அமைச்சர் எரிக்சூல்ஹெய்ம் மேலும் குறிப்பிட்டார்.

# கிளி.பொது அமைப்புக்களின் ஒன்றியம் இன்று கண்டனப் பேரணிக்கு அழைப்பு

குடாநாட்டில் சிங்களப் படைகள் மக்கள் மீதான வெறியாட்டத்தைக் கண்டித்து இன்று கிளிநொச்சி மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் கண்டனப் பேரணி யொன்றை நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் புங்குடுதீவு மடத்துவெளியில் சிங்கள கடற்படைச் சிப்பாய்கள் யுவதி மீது பாலியல் வல்லுறவு மேற்கொண்டு படுகொலை செய்தமையைக் கண்டித்தும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர்கள், மாணவர்கள், ஊடக வியலாளர்கள், பொது மக்கள் மீதான அண்மைய நாட்களில் சிறிலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் மிலேச்சத்தனமான தாக்குதல் களைக் கண்டித்து இன்று வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு நடை பெறும் கண்டனப் பேரணியில் அரச. அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், வர்த்தகர்கள், கூட்டுறவாளர்கள் மற்றும் அனைத்து மக்களையும் கலந்து எமது எதிர்ப்புணர்வை சர்வதேசத்திற்கு வெளிக்காட்ட கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஒன்று கூடுமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.

## யாழ். வன்னிப் பகுதி வேளாண் இடுபொருள் வாணிபர் கவனத்திற்கு

இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பெறும் யூரியா உரத்தின் ஆகக்கூடிய விற்பனை விலை கீழ்வருமாறு தீர்மானிக்கப்பெற்றுள்ளது. குறித்த உரத்தினை 2005-12-21ஆம் நாளிலிருந்து அவ்விலையில் விற்பனை செய்யுமாறு யாழ். வன்னிப்பகுதி வேளாண் இடுபொருள் வாணிப உரிமையாளரை வேண்டுகிறோம்.

| தொ எண் | உரத்தின் பெயர் | விற்பனை விலை | |
|---|---|---|---|
| | | வன்னி | யாழ். |
| 01 | யூரியா (50 கிலோக்கிராம்) | 682.50 | 703.50 |

ஆளுகை,
விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி,
நிதித்துறை.

### யாழ்.இல்..

சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

யாழ். கல்வியங்காட்டுச் சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்தனர்.

அப்பகுதியிலுள்ள செங்குந்தா சந்தை, நவீன சந்தையின் மாடிப் பகுதியில் காவலுக்கு நின்ற இராணுவத்தினர் மீது மாலை 5.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் காயமடைந்த படையினர் பலாலி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதனையடுத்து இப்பகுதியில் குவிக்கப்பட்ட இராணுவத்தினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் ஒரு இளைஞனைக் கைது செய்துள்ளனர்.

யாழ். கொட்டடி வில்லூன்றி விநாயகர் ஆலயத்துக்கு அருகிலுள்ள இராணுவக் காவலரண் மீது நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியானார்.

மாலை 6.30 மணிக்கு இடம் பெற்ற தாக்குதலையடுத்து அப்பகுதியில் பெருமளவு இராணுவத்தினர் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். இவர்கள் பொதுமக்கள் மீது கடும் தாக்குதல்களை நடத்தியதுடன் அப்பகுதியில் தேடுதலும் நடத்தியுள்ளனர்.

அரியாலைப் பகுதியில் நேற்றுக் காலை விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த படையினர் மீது கைக்குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஈருருளியில் உணவுப்பொருட்களைக் கொண்டு வந்த படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து மேலதிகமான படையினர் விரைந்துவந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரிய வருகிறது. (33.28)

### த.தே..

வுக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை பரமேஸ்வராச் சந்தியில் பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை, அமைதிப் பேரணியில் சென்ற உபவேந்தர், பேராசிரியர்கள் மீதும், மாணவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு பேரணி தடுத்து நிறுத்தப்பட்டமை, முச்சக்கர வண்டிகள் மீதும் அதன் சாரதிகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டமை, பொதுவீதியில் செல்லுகின்ற மக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல், பல்கலை. வளாகத்தில் பொலிஸ், படையினர் மேற்கொண்ட அட்டகாசங்கள் போன்ற படையினரின் அத்துமீறிய செயற்பாடுகள் பற்றி சனாதிபதியிடம் கூறினோம்.

படையினரின் இந்தச் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். படையினர் முகாம்களுக்குள் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினோம்.

இவற்றைக் கேட்டறிந்த சனாதிபதி இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, வைஸ் அட்மிரல் சாந்தகிரி, பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை வரவழைத்தார். இதன் பின்னர் எமக்கும் அவர்களுக்குமான பேச்சுக்களும் காரசாரமாக அமைந்தது. நாம் கூறிய நிலைப்பாடுகளை அவர்கள் மறுத்தனர். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக உள்ள காவலரண்களை அகற்றுமாறு நாம் கேட்டபோது படைத் தளபதி அதனைத் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

இராணுவத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்படாவிட்டால் யுத்தம் மூளும் அபாய நிலை உருவாகும் வாய்ப்பிருக்கிறது எனவும் தெரிவித்தோம். எப்படியிருந்தாலும் இந்தச் சந்திப்பில் எமக்குத் திருப்தியில்லை எனவும் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நேற்று மாலை நான்கு மணிக்கு இச்சந்திப்பு மகிந்தவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.